விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 மாசி 3 ஜ, ஆகி 5 இதழ் 5
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 15 2 1986

UNIVERSITY OF JAFFNA ... RECEIVED 17-2-1986

## வலயப் பகுதிக்குள் இருக்கும் கல்லூரிகள் பாதிப்புறாமல் இராணுவ செயற்பாடு!

### பிரிகேடியர் உறுதி

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணத்தில் இராணுவ பாதுகாப்புவலய பகுதிக்குள் இருக்கும் கல்லூரிகளுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்கப்படுமென்று ராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் திரு எச். எஸ். ரூபசிங்கா தெரிவித்துள்ளார்.

யாழ். பிராந்திய கல்லூரி அதிபர்கள் சங்கத்தின் தூதுகோஷ்டி ஒன்று இச்சங்கத்தின் தலைவரும் விக்டோறியாக்கல்லூரிஅதிபருமான திரு அருணசலம் தலைமையில் நேற்று பலாலி முகாமில் பிரிகேடியர் ரூபசிங்காவைச் சந்தித்து ஆயி

[12-ம் பக்கம் பார்க்க]

## சமூக விரோதிக்கு தண்டனை

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோத செயல்களில் ஈடுபட்ட குற்றத்துக்காக இணுவிலைச் சேர்ந்த செல்லப்பா செல்வநாயகம் (35 வயது) என்பவருக்கு 'தமிழ் ஈழ இராணுவம்' இயக்கம் நேற்று மரண தண்டனை வழங்கியுள்ளது.

(12ம் பக்கம் பார்க்க)

# தாக்குதலை சமாளிக்கமுடியாது மக்களைசுட்டுத்தள்ளுகின்றனர்

## இலங்கைப்படைநிலை பற்றி அமெரிக்க அரசு அறிக்கை!

(ராய்ட்டர்)

"தமிழ்த் தீவிரவாதிகள் ஒரு பெருந்தாக்குதலை நடத்துகின்ற பட்சத்தில் அதனைச் சமாளிக்க எதிர்த்தாக்குதல் ஒன்றினை மேற்கொள்ளுமளவில் இலங்கைப் பாதுகாப்புப் படைகள் ஆயத்த நிலையில் இல்லை. தீவிரவாதிகளின் நேரடித்தாக்குதலுக்கு அல்லது தரைக் கண்ணிவெடித் தாக்குதல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்போதெல்லாம் அப்பாவிப் பொதுமக்களை எவ்வித பாகுபாடுமின்றி எழுந்தமானமாகச் சுட்டுத்தள்ளுவது இலங்கைப் பாதுகாப்புப் படைகளுக்குச் சகஜமான சங்கதியாகி விட்டது!"

அமெரிக்க அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ள ஒரு உத்தியோகபூர்வ அறிக்கையை மேற்கோள்காட்டி, 'ராய்ட்டர்' செய்தி நிறுவனம் நேற்று மேற்கண்ட தகவலை வெளியிட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகள் ஒட்டுமொத்தமாக மீறப்படுவதில் பாதுகாப்புப்படைகளும் வேறு சில சக்திகளும் வகிக்கின்ற பாத்திரத்தை மேற்படி அமெரிக்க அரசாங்க அறிக்கை கடுமையாகச் சாடியுள்ளதாகவும் மேற்படி செய்தி மேலும் கூறுகிறது.

## 'காணாமல்போகும் மக்கள்': ஐ. நா. பட்டியலில் இலங்கை!

(ராய்ட்டர்)

"இலங்கையிலும் மக்கள் இருந்தாற் போல காணாமல் போகும் நிர்ப்பந்தத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள் அரசியல் ரீதியான மோதல்களின் போது, மேலும் மேலும் அதிகரித்த எண்ணிக்கையில் மக்கள் காணாமல் போவது உலக நாடுகள் பலவற்றில் நாளாந்த நடப்பாகி விட்டது.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கான ஐ. நா. கமிஷன் தனது ஆறுவாரகால வருடாந்த தொடர்க் கூட்டத்தின் போது மற்படி கருத்து வெளியிடப்பட்டுள்ளது.

அரசியல் மோதல்களின் போது மக்கள் அதிகரித்த அளவில் காணாமல் போகின்றனர் என்று மேற்படி கமிஷன் அறிவித்த நாடுகளின் பட்டியலில் இலங்கையும் ஒன்றாக இடம் பெறுகின்றது.

(9-ம் பக்கம் பார்க்க)

உருக்கமான வேண்டுகோள்

07-02-86 அன்று பிற்பகல் 6-30 மணியளவில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்து கொண்டிருந்த இல 26 ஸ்ரீ 6162 (சேவ்ரி) லொறி இனந்தெரியாதவர்களினால் சாவகச்சேரிக்கும், கைதடிக்குமிடையில் திசை திருப்பப்பட்டு அதிலிருந்த பொருட்கள் கடத்தப்பட்டுள்ளன. கடத்தப்பட்ட பொருட்கள் யாவும் பொதுமக்களாகிய எமது பொருட்களே நாங்கள்மிகுந்த கஷ்டத்துடன் உழைத்து வந்த பொருட்கள் எமது நாட்டில் வைத்து கடத்தப்பட்டது மிகுந்த வேதனையளிக்கிறது. புனிதமான இயக்கங்கள் இதில் கலையிட்டு எமது பரிதாப நிலையை உணர்ந்து இதனைமீட்டுத்தருமாறு மிகவும் மன்றாட்டமாக கேட்டுக்கொள்ளுகிறோம்.

பொருட்களை இழந்து
பாதிக்கப்பட்ட மக்கள்

A-249

## கடற்பகுதி பாதுகாப்பு வலய விஸ்தரிப்பு

### கூட்டணி கண்டனம்

(சென்னை)

இலங்கையில் பருத்தித்துறையிலிருந்து கிழக்கு மாகாண கோமாரி வரையிலான கடற்பிரதேசத்தைபாதுகாப்பு வலயமாக அரசு அறிவித்திருப்பதை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என்று தமிழர் விடுதலை கூட்டணி வலியுறுத்தி உள்ளது.

இலங்கைத் தமிழர்கட்கு எதிராக கடுமையாக நடைபெறும் இராணுவ நடவடிக்கையின் தொடர்ச்சிதான் இது என்று மேற்படி கூட்டணி சென்னையில் நேற்று விடுத்த அறிக்கையில்கண்டித்துள்ளது.

(9-ம் பக்கம பார்க்க)

## 'சிவா' லண்டன்செல்கிறார்

(சென்னை)

தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு மு சிவசிதம்பரம் அடுத்தவாரம் லண்டன் செல்கிறார்.

லண்டனிலுள்ள தமிழர் அமைப்புகளுடன் சில முக்கிய ஆலோசனைகளை மேற்கொள்ளும் பொருட்டே அவர் லண்டன் செல்கிறார்.

## இளம்பெண்கள் கைது: அன்னையர் முன்னணி கண்டனம்

(ஏ. வி. மாணிக்கம்)

"தயவு தாட்சண்ய மின்றி இளம்பெண்கள் கைதுசெய்யப்படுவதும், அவர்களின் கற்பு பறிக்கப்படுவதும், கொலை செய்யப்படுவதும், தமிழர்களுக்கெதிராக அதிகரித்து வரும் வன்செயல்களில் இது மிக மோசமானதொருகட்டத்தை அடைந்துள்ளதை எடுத்துக்காட்டுகிறது என்று அன்னையர் முன்னணி பெரும் அதிர்ச்சி தெரிவித்துள்ளது.

மனித உரிமைகளுக்கான இயக்கங்களும், பெண்கள் அமைப்புகளும் இந்த அநீதியான செயல்களைத்தடுக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அன்னையர் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

சமீபத்தில் மூதூர் கட்டைபறிச்சான், வவனியா மகா இலுப்பைக்குளம் ஆகிய பகுதிகளில் ஆயுதப்படையினரா

[9-ம் பக்கம் பார்க்க]

## தொடர்ந்து விசாரணை

(மூதூர்)

மூதூரில்கைதுசெய்யப்பட்ட இளம் பெண்களில் செல்வி வனஜா என்பவர் மூதூர் ஆஸ்பத்திரியில் தொடர்ந்து சிகிச்சை பெற்றுவருகிறார்.

கைதுசெய்யப்பட்ட இவ்விளம்பெண் கடுமையாக தாக்கப்பட்டுள்ளதாகவும், இவரது வைத்திய அறிக்கை பெறமுடியாமலிருப்பதாகவும் திருமலை பிரஜைகள்குழுவினர் தெரிவித்துள்ளனர்.

(9-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழருக்கு நீதி கிடைக்க "உறுதியான நடவடிக்கைகளை இந்தியா எடுக்கவேண்டும்"

### தெலுங்குதேசம் கட்சி மகாநாட்டில் வற்புறுத்து

[ஹைதராபாத்]

இந்திய மத்திய அரசாங்கம் இலங்கைத் தமிழ் மக்களுக்கு நீதி கிடைப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை உறுதியாக மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்கும் தீர்மானமொன்று அண்மையில் ஹைதராபத்தில் கூடிய தெலுங்குதேசக் கட்சியின் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது.

ஆந்திரப்பிரதேசத்தின் தலைநகரான ஹைதராபாத்தில், தெலுங்குதேசக் கட்சியின் தலைவர் திரு என். டி ராமராவ் தலைமையில் நடைபெற்ற இம் மகாநாட்டில் இந்திரா காங்கிரஸைத் தவிர்ந்தஏனையகட்சிகளில் பெரும்பாலானவை கலந்துகொண்டன. மாநாட்டின்

(9-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச் விளம்பரம்

## விற்பனைக்கு

வெளிநாடு செல்பவரின் வீட்டுத் தளபாடங்கள், தேக்கு அலுமாரிகள், Show case, எழுது மேசைகள், சாய்வுநாற்காலிகள்TeaTrolley Spray Gun, வெளியூர் கிளாஸ் வகைகள், Pyrex, கோப்பைகள், எவர் சில்வர் பித்தளைப் பாத்திரங்கள், Gas cooker. மின் ஸ்திரிகைகள், மின்விசிறிகள். எலக்றிக் அவன், Hot plate, மற்றும் துணிவகைகள் உடன் விற்பனைக்குண்டு. பத்மநாதன், ஆடியபாதம் ரோட், திருநெல்வேலி வடக்கு. மருத்துவக் கல்லூரிக்கும் திருநெல்வேலிச் சந்திக்குமிடையில். [C749]

கென்வூட் குளிர்சாதனப் பெட்டி விற்பனைக்குண்டு. தொடர்பு; நியூ குகானந்த பவன், தட்டாதெரு சந்தி, தேனீர்க்கடை, யாழ்ப்பாணம். [C 722]

இறைச்சிக்கான கோழி புரோயிலர் (Broilers) வேறு இனங்களும் விற்பனை ஆகிறது. தொடர்பு கொள்ள வேண்டிய இடம்: அண்ணா பாம் செம்மாதெரு, ஜும் மா மொஸ்க்லேன், யாழ்ப்பாணம். A 237

க.பொ.த (உயர்) 86 மாணவர்களுக்கு ஞாயிறுதோறும காலை 10-12 கலை/வர்த்தக வினவிடை வகுப்புக்கள் நடைபெறுகின்றன. Modern Education Centre, Karaveddy. [C593]

## 2-வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன் உமாரமணன் பாலசுப்பிரமணியம்

கட்டப்பிராயைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் லலிதாம்பிகை தம்பதிகளின் செல்வப் புதல்வன் உமாரமணன் இன்று தனது இரண்டாவது பிறந்த நாளை தனது இல்லத்தில் சிறப்பாககொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அம்மம்மா, மாமாமார், அன்ரிமார், அப்பம்மா, சித்தப்பாமார், அத்தைமார் அனைவரும் பல் கலையும்பெற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள். (C 758)

## விற்பனைக்கு

300 அடி நீளமான 2'' அல்கத்தீன் பைப் விற்பனைக்குள்ளது. சிறிதளவு மட்டுமே பாவித்தது. அத்துடன் வயரிங் செய்ய உகந்த புதிய ½'' P. V. C. குழாய்கள் 23 விற்பனைக்குண்டு. C. T. அன்ரனி ராஜா, அமலிவனம், சில்வா வீதி, வட்டக்கச்சி. [A 242]

BROILERS இறைச்சிக் கோழிகள் எப்பொழுதும் பெற்றுக்கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [C 767]

## மணப்பந்தல்

அண்மையில் வெளிநாட்டிலிருந்து விடுமுறையில் வந்திருக்கும் மணமகனுக்கு பெண் தேவை. பெண் சர்வலட்சணமும் பொருந்தியவராகவும் கல்வியறிவுடையவராகவும், வயது 25 க்கும் 32 க்கும் மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். முதலில் சாதக குறிப்பும் படமும் அவசியம் வேண்டும். அத்தோடு சீதனமும் எதிர்பார்க்கப்படும். பொருந்தாத சாதகமும் படமும் திரும்ப அனுப்பிவைக்கப்படும். தொடர்பு: விளம்பர இல: C 755, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம் [C 755]

யாழ். இந்து உயர்குல வேளாள அரசாங்க உத்தியோகத்தருக்கு, நன்குபடித்த அழகான மணப்பெண் தேவை. வயது 30-33 இருக்கலாம் பெற்றோர் படத்துடன் தொடர்பு கொள்ளவும் விளம்பர இல:C 743, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 743]

## தவறிவிட்டது

2800610778 இலக்கமுடைய சிவக்கொழுந்து பேரம்பலம் என்பவருடைய அடையாள அட்டை 13-2-86 இல் யாழ். நகர எல்லைக்குள் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பின்வரும் விலாசத்தில் ஒப்படைக்கவும். டில்கா கிறீம் ஹவுஸ், 404, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C 771]

## வாடகைக்கு

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் மேற்கு வீதியில் கடைக் கட்டிடம் வாடகைக்கு உண்டு. முற்பணம் கட்டுவோர் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீமாவை விநாயகர் மங்கள ஏஜன்சி, கொல்லங்கலட்டி மதல்லிப்பழை. கிளை 52/1, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். [C 773]

## சோதிடம்

சனிவியாழ ராகு கேது மாற்றத்தினால் 1986-ம் ஆண்டு உங்களுக்கு எப்படி? ரூபா 2 ராசிபலன் சோதிடர் ஆ. சிவராசா, வேலணை. (C 772)

## வகுப்புகள்

கட்டிடப் படம் வரைஞர் (டிரானமென்சிப்) ரிபிறிஃகேஷன் அன் ஏயர்கொண்டிஷன், Quantity Surveying, எலக்ரிக்கல் வயரிங், ரீ. வீ. அன் றேடியோ தொழில் நுட்பம், தமிழ், ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து, Spoken English ஆகிய பயிற்சி நெறிகள் 14-02-86ல் ஆரம்பமாகின்றன. தொடர்பு: பதிவாளர் Institute of Technical Studies, பழைய டிஸ்பென்சரி முன்பாக, வட்டுக்கோட்டை. C 747

B.A, G.A.Q. - புவியியல் ஆசிரியர் குணராசாவின் புவியியல் விரிவுரைகள் 15-02-86 ஆரம்பமாகின்றன: 82, பிறவுண் வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். [C748]

வயறிங், வெல்டிங், ரேடியோ அன் ரீ. வி. மோட்டார் மெக்கானிசம், மோட்டர் வைன்டிங் - புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. மிகக் குறைந்த சட்டணம். சான்றிதழ் பெறுமதியானது. தொடர்பு; VISPA ENGINEERING 328, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். C 740

A/L Chemistry - திரு. மகாதேவா, ''வெப்ப இராசயனம்'' Physics - திரு. நந்தகுமார் ''வெப்பவியல்'' ஆரம்பம் 9-2-86 BOND INSTITUTES, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம், (C-664)

சகலவிதமான தட்டச்சு (தமிழ், ஆங்கிலம்) ரோனியோ வேலைகளும் ஏற்றுக்கொள்ளப்படும். ''TEENS COPY'' 514/14, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 665)

A/L 88 ஆரம்பம் 9-2-86 Chemistry திரு. மகாதேவா, Physics-திரு. நந்தகுமார், Zoology - திரு. K. சிவபாதம், Botany - திரு. P. ஐங்கரநேசன், Pure maths, App maths- திரு ஆறுமுகம் BOND INSTITUTES, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C-666]

Basic English Mr. K. ஜெயக்குமார் ஆரம்பம் 10-2-86 பி. ப. 4-00 BOND INSTITUTES, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் (C 663)

## கல்வி

நோர்வேயில் பல்கலைக்கழகம்; உயர் பாடசாலைகளில் மேற்படிப்பு; புலமைப் பரிசில்; கடனுதவி ஆகிய விபரங்கள் பெற 20/- பெறுமதி முத்திரைகளுடன் சுயவிலாமிட்ட முத்திரை ஒட்டிய கவருடன்விண்ணப்பிக்கஅபிவிருத்தி தகவல் சேவை, விளம்பர இல: C 766, C/O ஈழநாடு, யாழ்ப்பாணம். (C-766)

## காணவில்லை

கேப்பை இனத்தைச் சேர்ந்த சிவப்புநிறமுடைய SS குறியுள்ள மாடு ஒன்றைக் காணவில்லை. கண்டவர்கள் கீழ்வரும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். S. சின்னத்துரை, இல. 11, பிறவுண் வீதி, 5th Lane, யாழ்ப்பாணம். [C 768]

## தேவை

காசாளர் (Cashier) தேவை. பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். நாவலர் சந்திக்கு அண்மித்த பகுதிகளில் வசிப்பவர்களாக இருத்தல்வேண்டும். Book-keeping துறையில் அனுபவம் அல்லது அறிவு உள்ளவர்களுக்கு முன்னுரிமை. Referees இருவரது பெயர், விலாசங்களைக் குறிப்பிட்டு 17-ம் திகதிக்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பரதாரர் M 31, மே/பா dyn ads, 476, பிரதான வீதி, சுண்டுக்குளி. [A 241]

மசி - பெர்குசன் உழவுயந்திர உதிரிப்பாகங்கள் விற்பனை செய்வதில் 20 வருட அனுபவமுடையவருக்கு வேலை தேவை. தொடர்பு: விளம்பர இல. C 737 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். C 737

எழுதுவினைஞர் தேவை. அழகான எழுத்து, கணக்கு வைக்கும் அனுபவம் மேலதிக தகைமை. உடன் நேரில் வரவும்: பே. சோமசுந்தரம், 411/1, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். C 753

வெள்ளைநிற உமிச்சாம்பல் தொகையாகத் தேவை. தொடர்பு கொள்க: அண்ணா இன்டஸ்றீஸ், இணுவில. போன்: 23412. [A 245]

வடமராட்சியில் ஓர் தையல் நிலையமும், ஓர் கைத்தறி நெசவு நிலையமும் பொறுப்பேற்று நடத்துவதற்கு 10 வருட அனுபவமுள்ள இரு பெண் இயக்குநர்கள் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: C731, C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். [C 731]

யாழ். வர்த்தகர் சங்கசெயலாளருக்கு உதவியாளர் தேவை. ஆங்கில அறிவுடையவராகவும் 40 வயதுக்கு மேற்பட்டவராகவும் 50 வயதுக்கு உட்பட்டவராகவும் வர்த்தக துறை அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும். தட்டெழுத்து, சுருக்கெழுத்து தெரிந்தவர்களுக்கு முதலிடம் அளிக்கப்படும். செயலாளர், சி. நமசிவாயம் 282, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (C 756]

## கண்ணீர் அஞ்சலி

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு ஆகியகோட்பாடுகளுக்கு உறைவிடமாய் வாழ்ந்து, எம் போன்றோரையும் அவ்வழியே வாழ நல்லுபதேசமருளிமறைந்த அறிவாற்றல் மேதை, எம் ஆசிரியப் பெருந்தகை நாமம் வாழ்க.

உலகத்துள் வாழும் நெறிப்படியே வாழ்பவன் வானகத்தே வாழும் தெய்வத்துள் ஒருவனாக நன்கு மதிக்கப்படுவான்; போற்றப்படுவான். குறள்வழி வாழ்வாங்கு வாழ்ந்தவன் எம் குருநாதன் அம்பிகைபாகன், அவன் பாதங்களை வாழ்த்தி வணங்குகின்றோம்.

எல். பக்கீர்சாமி,
ப. இராஜமணி,
ப. இராஜா (நோர்வே)
'மணி மனை',
8, கன்னாதிட்டி ஒழுங்கை,
யாழ்ப்பாணம். [A 236]

## 3-வது ஆண்டு நினைவஞ்சலி



கனகரத்தினம் துரைசிங்கம்

தோற்றம்: 23-02-1935
மறைவு: 15-02-1983

இனிய இல்லத்தவனாய், தந்தையாய், நல்ல உடன்பிறப்பாய், மைத்துனனாய், மாமனாய், சுற்றந்தழுவிய உறவினனாய், உத்தியோகத் திணைக்களத்தின்ஒளிவிளக்காய், இனிய நண்பனாய், எல்லோர்க்கும் நல்லவனாய் வாழ்ந்து எம்மைவிட்டு மீளாப் பயணம் சென்ற செல்வமே! தங்கள் இயல்பை நாம் மறக்க மாட்டோம். தங்களுக்கு எங்கள் அஞ்சலி. தங்களை நினைந்துருகி நிற்கிறோம். வணக்கம்.

மனைவி, மக்கள்,
சகோதரர், மைத்துனர்,
உறவினர்.
6, கந்தபுராண வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம். (C 761)

## 2-வது ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
நாகநாதன்
குமாரசுவாமி, J.P.

(யாழ். ஐக்கிய வியாபார சங்க உதவி பொது முகாமையாளர்)

உதயம்: 25-07-1920
உதிர்வு 09 03-1984

எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காகத் திகழ்ந்து காலமெல்லாம் எங்களைக் கண்ணின் இமைபோல் காத்தருளிய எங்கள் அன்புத் தெய்வமே! எங்கள் அன்புத் தந்தையே! எங்களை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்தி இறைவன் திருவடி சேர்ந்து வருடம் இரண்டு பூர்த்தியாகிய போதிலும் உங்கள் அன்பும், பண்பும், பாசமும் எங்கள் இதயத்தைவிட்டு என்றும் அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள்பிரிவால்துயருறும்:
அன்பு மனைவி,
மக்கள் மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.
'மகேச வாசா',
கொடிகாமம்.
(C 714)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறல்கள்பற்றி நேச நாடுகளை அமெரிக்கா சாடுகிறது

(வாஷிங்டன்)

**மனித உரிமை மீறல்களுக்காக அமெரிக்கா தனது நெருங்கிய சகாக்களைச் சாடியுள்ளது.**

**இவற்றுடன் சோவியத் யூனியன், ஈரான், நிக்கரகுவா போன்ற நாடுகளும் கண்டிக்கப்பட்டுள்ளன.**

அமெரிக்க மனித உரிமைகள் பணியகத்தின் பணிப்பாளர் திரு ரிச்சார்ட் ஷிவ்ஃடரினல் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றிலேயே இந்நாடுகள் கண்டிக்கப்பட்டுள்ளன.

இவ்வறிக்கையில், சோவியத் யூனியனில் புதிய தலைவராக மிக்கேல் கோர்பச்சேவ் பதவியேற்றபின் மனிதஉரிமை மீறல்கள் குறையுமென எதிர்பார்க்கப்பட்டபோதிலும் மிகவும் மோசமாக நடைபெற்று வருகின்றன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த வருடம் சுமார் ஆயிரம் சோவியத் யூதர்களுக்கு மட்டுமே நாட்டைவிட்டு வெளியேற அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று இவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்கள் மிகவும் மோசமாக நடைபெறும் நாடு எதியோப்பியாவே எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் இவ்வறிக்கையில், அந்நாட்டுத் தலைவர்களின் அசிரத்தையான நடவடிக்கைகளால் ஆயிரக்கணக்கான மக்கள் மாண்டுள்ளனர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகள், நிக்கரகுவா, ஈரான் ஆகிய நாடுகளும் கண்டிக்கப்பட்டுள்ளன.

ஆயினும் இவ்வறிக்கையில், பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ், தென் கொரியா, தென்னுபிரிக்கா, எல்சல்வடோர், இஸ்ரேல் ஆகிய நாடுகளும் மனித உரிமைகளுக்காகச் சாடப்பட்டிருப்பதே அரசியல் அவதானிகளை ஆச்சரியப்படவைத்துள்ளது. ஏனெனில் இந்நாடுகள் அமெரிக்காவின் மிக நெருங்கிய நாடுகளாகக் கருதப்படுபவை.

தேர்தல்கள் நடைபெற்று மீண்டும் ஜனநாயகம் வலுப்பெற்றிருக்கும் லத்தீன் அமெரிக்க நாடுகள் இவ்வறிக்கையில் பாராட்டப்பட்டுள்ளன.

(செ)

## தேர்தல்?

[டாக்கா]

பங்களாதேஷில் பொதுத் தேர்தல்கள் இவ்வருட நடுப்பகுதியில் நடைபெறுமென அதிபர் ஜெனரல் எர்ஷாட்கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் மாபெரும் கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் இவ்வருடம் ஜூன் மாதமளவில் தேர்தல் நடத்தப்படுமெனத் தெரிவித்தாராயினும் அதற்கான திகதியைக் குறிப்பிடவில்லை. ஆளும் ராணுவ அரசுக்கு ஆதரவாகக் கட்சியொன்று இக்கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தது. [செ]

உலகச் செய்திகள்

## விமானப் பயணிகளுக்கு இப்படி ஒரு சேவை

(லண்டன்)

பிரிட்டிஷ் விமானசேவை, விமானத்திலுள்ள பயணிகள் வெளியிலுள்ளோருடன் தொடர்பு கொள்ளக்கூடிய வசதியை தனது பிரயாணிகளுக்கு வழங்கவிருக்கிறது.

முதலில் விமானத்திலுள்ள பயணிகள் வெளியிடங்களுக்குப் பேசக்கூடிய வசதியே செய்து கொடுக்கப்படவிருக்கிறது. அதன் பின்னரே வெளியிலுள்ளோர் விமானத்திலுள்ள பயணிகளுடன் தொடர்பு கொள்ள வசதி செய்வது பற்றி ஆராயப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் அமெரிக்க விமான சேவைக் கம்பெனிகளே, தமது உள்ளூர் பயணங்களில் இத்தகைய சேவையை அளித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (செ)

## ரிச்சார்ட் ஹட்லிக்கு ஆடம்பரக் கார்!

(வெலிங்டன்)

நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் 'நம்பிக்கை நட்சத்திரம்' ரிச்சார்ட் ஹட்லி ஆவார். இம்முறை ஆஸ்திரேலியாவில் இடம்பெற்ற உலகக் கிண்ண மட்டுப்படுத்தப்பட்ட கிரிக்கெட் பந்தயம் கடந்த ஆண்டு ஆஸ்திரேலியாவுடனுன டெஸ்ட் தொடர் என்பவற்றில் நியூஸிலாந்துதிறமையாக ஆடியது.

இந்தஆட்டத்தின் பக்கபலமாக நியூஸிலாந்து சார்பில் ஆடியவர் ரிச்சார்ட் ஹட்லி என்பது குறிப்பிடத்தக்கது. இவர் கணிசமான விக்கட்டுக்களைக் கைப்பற்றியதுடன் ஓட்ட எண்ணிக்கைகளையும் கட்டுப்படுத்தினுர்.

ஹட்லியின் இந்த ஆட்டத்தைக் கௌரவித்து விலையுயர்ந்த ஆடம்பரக் கார் ஒன்று பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் இந்த ஆண்டுக்கான சர்வதேச கிரிக்கெட் வீரர் விருதையும், மேற்குறிப்பிட்ட ஆட்டங்களில் கிடைத்த வருமானங்களில் ஒரு பகுதியும் ரிச்சார்ட்ஹடலிக்கு வழங்கப்பட்டுள்ளது. (கி)

## இஸ்ரேலுடன் ராஜதந்திர உறவு

(லண்டன்)

மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரிகோஸ்ட் இஸ்ரேலுடனுன தனது ராஜதந்திர உறவுகளை மீண்டும் ஆரம்பித்துள்ளது.

ஐவரிகோஸ்ட் 73ம் ஆண்டு நடந்த அரபு - இஸ்ரேல் யுத்தத்தையடுத்து இஸ்ரேலுடனுன தனது உறவுகளை முறித்துக்கொண்டது.

லைபீரியா, ஸயர் ஆகிய நாடுகளையடுத்து மேற்காசியாவில் ஐவரிகோஸ்டும் இஸ்ரேலுடனுன தனது ராஜதந்திர உறவுகளை மீண்டும் ஆரம்பித்திருப்பது இஸ்ரேலுக்குக் கிடைத்த ஒரு வெற்றியாகவே கருதப்படுகிறது. [செ]

## திரு. ஹெக்டேயின் ராஜினுமா ஏற்கப்பட்டது!

(பெங்களூர்)

கர்நாடக முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டேயின் ராஜினுமாவை மாநில ஆளுனர் திரு. பானர்ஜா ஏற்றுக் கொண்டுள்ளார்.

திரு.ஹெக்டே, சாராயத்தை புட்டியில் அடைக்கும் ஒப்பந்தமொன்றில் முறைகேடுகள் நடந்ததாக கர்னுடக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்ததைத் தொடர்ந்து ராஜினுமாச் செய்தது தெரிந்ததே!

ராஜினுமாவை ஆளுனர் ஏற்றுக்கொண்டு வெளியிட்ட அறிக்கையொன்றில், மேலதிக ஏற்பாடுகளை மேற்கொள்ளும் வரை திரு. ஹெக்டேயை தொடர்ந்து முதலமைச்சர் பதவியிலிருக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். (செ)

## ஈக்களின் 'உரிமைக்'காக ஒரு இயக்கம்!

(ராய்ட்டர்)

தற்கால விஞ்ஞான ஆய்வுகள் ஈக்கள், நுளம்புகள் முதலானவை கொடூரமான முறையில் மரணத்தைத் தழுவுகின்றன என்பதை நிரூபிக்குமானுல் இவ்விஷயத்தில் தனது ஸ்தாபனம் தலையிட நேரிடும் என்று பிராணிகள் மேலான கொடுமையைத் தடுக்கும் ரோயல் கழகத்தின் தலைவர் ஹியூவேர்த் பிரகடனஞ் செய்துள்ளார்.

''பிராணிகளைப் பரிசோதனைக்கென பயன் படுத்தப்படும்போது அப்பிராணி நினைவிழக்கப்படப்பட்டு உடனடியாக மரணிக்கச் செய்ய வேண்டும்'' என்று திரு. வேர்க் கூறுகிறுர்.

ஈக்களை கொல்லுவதற்குச் சுயமாகவே இயக்கம் ஆரம்பித்துள்ள இன்னெருவரான ஃபிராங் பீட்டர்ஸ் கேட்கின்ற கேள்விகள் இவை:

''ஈக்களின் இருதயத் துடிப்பை அவர்கள் பரிசோதிக்கப் போகிறுர்களா? அல்லது ஈக்களைக் கொல்லும் நாசினியை வாங்க ஒரு லைசன்ஸ் பெற வேண்டுமென்கிறுர்களா? ஈக்களைச் சுட்டுத் தள்ளுவதற்கான துப்பாக்கி யொன்றுக்கான லைசன்ஸ் எடுத்தாக வேண்டுமென்கிறுர்களா?''

ஈ கொல்லி இயக்கத்தினரின் முயற்சியால் இதுவரை 44,000 செத்த ஈக்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாம்.

## மீண்டும் விமானசேவை

[வாஷிங்டன்]

அமெரிக்காவுக்கும், சோவியத்யூனியனுக்குமிடையே விமானசேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இத்தகவலை நேற்று வெளியிட்ட அமெரிக்க அரசப்பேச்சாளர் ஒருவர் ஏப்பிரல் மாதத்தில் இச்சேவை ஆரம்பிக்க கடந்த நவம்பரில் ஜெனிவாவில் கூடிய இரு நாட்டுத்தலைவர்களும் முடிவெடுத்ததாகவும், இதற்கான உடனபடிக்கையொன்று வாஷிங்டனில் கைச்சாத்திடப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

போலந்து தேசத்தில் 1981ம் ஆண்டில் ராணுவச் சட்டம் பிறப்பிக்கப்பட்டதையடுத்து அமெரிக்கா, சோவியத்துக்கும் அமெரிக்காவுக்கும் இடையிலான விமானசேவைகளைரத்துசெய்திருந்தது. (செ)

## அராலியில் பயிற்சிமுகாம்

(அராலி)

பாராளுமன்ற விளையாட்டுத்துறை அமைச்சின் ஒரு நாள் பயிற்சிமுகாம், அராலி மாவத்தை விளையாட்டுக்கழக விளையாட்டு மைதானத்தில் 22ம் திகதி சனிக்கிழமைகாலை 9 00 மணிக்கு நடைபெறவுள்ளது.

[11ம் பக்கம் பார்க்க]

## கடற்படை சுட்டு படகு மூழ்கியது

[இராமேஸ்வரம்]

கச்சதீவுக் கடலுக்கருகில் மீன் பிடித்துக்கொண்டிருந்த மீன்பிடிப் படகை நோக்கி இலங்கைக் கடற்படைக் கப்பலொன்று சுட்டதில் படகு மூழ்கியது.

ஆயினும் படகிலிருந்த நால்வரும் தப்பிவிட்டனர்.

இரு மீனவர்கள் இந்தியக் கரையோரக் காவற்படையினராலும், மற்ற இருவரும் இன்னெரு மீனவர் படகினுலும் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

இவர்களின் தகவலின்படி, படகிலிருந்தவர்கள் மீன்பிடித்துக்கொண்டிருக்கையில் இலங்கைக் கடற்படைக் கப்பல் ஒன்று சுட்டதாகவும், இன்னெரு படகு தங்கள் படகு ஒன்றுடன் மோதியதால் படகின் முன்பகுதி பெருமளவு சேதமடைந்து படகு மூழ்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [செ]

# ஈராக் நச்சு ஆயுதங்களை பாவிப்பதாக ஈரான் குற்றச்சாட்டு!

[ராய்ட்டர்]

வளைகுடாப் போரில் ஈராக் இரசாயன ஆயுதங்களைப் பாவித்துள்ளதாக ஈரான் குற்றஞ் சாட்டியுள்ளது.

ஐ. நா. வுக்கான ஈரான் தூதுவர் திரு. ரஜாய் நேற்று வாஷிங்டனில் இக்குற்றச்சாட்டை ஈராக்மீது சுமத்தினுர்.

ஈரானிய நகரமான அபடான் மீது ஈராக் நச்சு வாயுக் குண்டுகளை ஏவியதென்றும், இதனுல் 85 ஈரானியப் போர் வீரர்கள் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனரென்றும் அவர் கூறினுர். இதற்கு முன்னரும் ஈராக் பல தடவைகள் நச்சு வாயு (இரசாயன ஆயுதம்) பாவித்துள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே கடந்த வாரம் தன்னுல் ஈராக்மீது தொடுக்கப்பட்ட தாக்குதலின்நோக்கம் நிறைவேறிவிட்டது என்றும், உலக நாடுகளும், ஸ்தாபனங்களும் ஈராக் ஜனுதிபதி சதாம் ஹுசேய்னின் நடவடிக்கைகளைக் கண்டிக்காதவரையில் யுத்தம் தொடர்ந்தும் [illegible] நடந்து கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. [செ]

ஈரான் கூறியுள்ளது.

ஈராக் இதனை மறுத்து பல இடங்களில் ஈரானிய படைகளைத் தனது படைகள் சிதறியோடச் செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

செய்மதிப் படங்களின்படி ஈராக்கின் அல்ஃபால் துறைமுகப் பிரதேசம் இப்போது ஈரானின் பூரண கட்டுப்பாட்டிலுள்ளதாக அறிவிக்கப்பட்டுளளது. இப்போது யுத்தம் அல்ஃபால் துறைமுகப்பகுதியைத் தாண்டி ஈராக்கின் உமார் காசார் கடற்படைத் தளத்தினருகே உக்கிரமாக

## ஊர்க்காவல் அணி அமைக்கத் தீர்மானம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் கிராமத்தின் முழுப் பிரதேசத்திலும் செயற்படக்கூடிய ஊர்க்காவல் அணி ஒன்றினை நிறுவுவதென கோப்பாய் விழிப்புக் குழு தீர்மானித்துள்ளது.

கோப்பாய் கிராமத்தின் கிராம சேவையாளர் பிரிவிலும், கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சன சமூக நிலையங்கள் முதலியவற்றை உள்ளடக்கிய பகுதிகளிலும் இவ்வூர்க்காவல் அணி நிறுவப்படுமெனவும், அணியில் வீட்டுக்கொருவராக மக்கள் பலரும் பங்குகொண்டு செயலாற்ற முன்வர வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது

கிராம மக்கள் மத்தியில் எழும் பிணக்குகளையும்,

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

பொதுநலச் சேவை எதனையும் பொறுப்பெடுக்கும் ஒருவன் தன்னை ஒரு பொதுச் சொத்தாகக் கருதிக்கொள்ளவேண்டும்.

—ஜெபர்சன்.

## நமது நோக்கு

# நினைவுப் பேருரை: சில சிந்தனைகள்

அறிவு இருவகைப்படலாம்; ஒன்று நூலைப் படித்து அடையும் முறை; மற்றொன்று பெரியோர் சொல்லக் கேட்டு அடையும் முறை.

இன்னொருவகையில் சொல்லும்போது ஒன்று கல்வி; மற்றொன்று கேள்வி. இவ்விரண்டிலும் கேள்வியே மேலானது என்று கூடச் சிலர் சொல்லுவார்கள்.

தானே படித்தறிந்ததை விடப் பண்பட்ட பேராசிரியர் ஒருவர் சொல்லக் கேட்பது நன்ருக மனதில் பதியும் என்கிற காரணத்தால் கல்வியைவிடக் கேள்வி மேலானது என்றும் கொள்ளலாம்.

தானே படித்தறிந்த அறிவில் குற்றங்கள் புகுந்திருக்கலாம். கேள்வியில் அது கிடையாது. அது இருமுறை வடிகட்டிய அறிவென்பதால் அதில் குற்றம் மிகக் குறைவு என்பது நிச்சயம்.

கல்வி அறிவும் கேள்வி அறிவும் நூலறிவைப் பலப்படுத்தத் துணைபுரியும்; இந் நூலறிவு நுண்ணறிவைத் தெளிவாக்கவேண்டும்.

எந்த ஒரு பொருளையும் எவர் சொல்லக் கேட்டாலும் அந்தப் பொருளின் உண்மையான தன்மையை ஆராய்ந்து அறிவதே அறிவாகும்.

இன்று யாழ். பல்கலைக் கழகக் கைலாசபதி அரங்கில் நடக்கும் கைலாசபதி நினைவுப் பேருரை என்ற நிகழ்ச்சி எமக்குச் சில நினைவுகளையும் சிந்தனைகளையும் தூண்டுகிறது.

சுமார் ஐம்பது வருடங்களுக்கு முன் - இன்று யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபமாகிய - பரமேசுவரக் கல்லூரி மண்டபத்தில் நடந்த சேர் பி இராமநாதன் நினைவுப் பேருரை நேற்றுப்போல் நினைவுக்கு வருகின்றது.

யாழ்ப்பாணம்கண்ட முதலாவது நினைவுப் பேருரை அது எனலாம். மேனாட்டுக் கல்வி மரபுகளில் சிறந்து விளங்கும் நினைவுப் பேருரைக்குரிய அம்சங்கள் அனைத்தும் அதில் காணப்பட்டன.

சான்றோர் ஒருவர் ஒரு குறிப்பிட்ட துறையில் தன்னலங்கருதாது உழைத்து அத்துறைமூலம் பிறருக்குப் பயன்படும்வகையில் புதிய சிந்தனைகள், சாதனைகள் நிகழ்த்துவாரானுல் அப்பெரியார் நினைவுப் பேருரைக்குத் தகைமையுடையவர்.

அன்னுரின் ஞாபகார்த்தமாக நிகழ்த்தப்படும் பேருரை அவருக்குச் செலுத்தும் சாதாரண அஞ்சலி உரையல்ல; அவரை நினைவுகூர்வதும் கௌரவிப்பதும் அப்பேருரையின் மறைமுகமான அம்சமென்பதை விளக்கத் தேவையில்லை பேருரையில் அவர்பற்றிய தகவல் எதுவும் இடம் பெறுவதில்லை. அவருக்குகந்த துறையில் நிகழும் ஆராய்ச்சியும் அது ஏற்படுத்தும் புதுக் கருத்தும் அது மக்களுக்கு உதவும் வகையுமே பேருரையின் முக்கிய அம்சங்களாகும்.

நாம் குறிப்பிட்ட சேர் பி. இராமநாதன் நினைவுரையை முதன்முதல் நிகழ்த்தியபெரியார் பேரறிஞர் சேர் சி பி. இராமசாமி ஐயர் அவர்கள். அகில இந்தியாவிலும், அறிஞர் உலகிலும், சட்டக் கலை, இலக்கியம், தத்துவம் என்ற துறைகளில் பாண்டித்தியம் படைத்த பெரியார்; தலைமை வகித்தவர் அரசாங்க சபையின் தலைவர் சேர் பாரன் ஜயத்திலகா அவர்கள். நன்றி கூறியவர் சேர் அருணுசலம் மகாதேவாஅவர்கள்.

தம்முடைய மேனாட்டுப் பல்கலைக்கழகப் படிப்பனைத்தும், அந்தப் பேருரையை செவ்வனே புரியஉதவவில்லையே என்ற மனத்தளர்ச்சியே தமக்குண்டான உணர்வென்று சொல்லி நன்றி நவின்ருர் சேர். மகாதேவா.

இச்காலத்தில்- அறிவு வேகமாக வளர்ந்த இக்காலத்திலும் அது ஒரு சிறந்த உதாரணமாகக் கொள்வது நினைவுப் பேருரையமைப்போரின்பொறுப்பென நாம் கருதுகின்ரேம்.

அன்றைய கருத்துக்கள் இன்று செல்லுபடியாகாதிருக்கலாம் அது முக்கியமல்ல. நினைவுப் பேருரை, கேட்போர் காலத்திற்கும் இடத்திற்குமேற்ப, அவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டும் வழியில் பயன்படவேண்டும். எனவே செவிச்செல்வம் ஆகிய பேருரை நுண்ணறிவுக்கு ஒரு முக்கிய சாதனமாகிறது.

இந்த வகையில் பேராசிரியர் கைலாசபதியை நினைவுபடுத்த யாழ் பல்கலைக் கழகம் தாமதமில்லாது ஒரு அரங்கை நிறுவியதோடு, அவருடைய சாதனைக்குரித்தான 'இலக்கிய விமர்சனம்' வளர்ச்சிபெறும் வகையில் புதிய நினைவுரை யாழ். பல்கலைக்கழகத்தில் இடம் பெறுவது சாலச் சிறந்தது.

சமுதாய வளர்ச்சிக்கு இன்றியமையாத இவ்வித நிகழ்ச்சியை ஊக்குவிப்பது யாழ். அறிஞரின் பெரும் பொறுப்பாகும்.

# அம்பிகைபாகன் ஓர் அற்புத மனிதன்

சுமார் ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நான் இலங்கை பல்கலைக்கழக கல்லூரி மாணவனுக இருக்கும்பொழுது ஆனந்த விகடனில் ஓர் தமிழ் நாட்டு பிரமுகர் தனது யாழ்ப்பாண விஜயத்தைப் பற்றி எழுதியதை வாசித்தது ஞாபகத்திற்கு வருகிறது. இதில் வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் அம்பிகை பாகனைப் பற்றி மிகவும் புகழ்ந்து எழுதியிருந்தார். தனக்கு ஒரு மகள் இருக்குமாயின் அம்பிகைபாகனை தன் மருமகன் ஆக்கிவிடுவேன் என்று புகழ்மாலை சூட்டினுர் வைத்தீஸ்வர வித்தியாலயம் எனது தந்தையார் (ஆசிரியர் நாகமுத்து) தாபித்ததால் வித்தியாலயத்தின் அபிவிருத்தியில் எனக்கு ஊக்கம் இருந்தும் இப்படி ஒரு நல்ல அதிபர் இருக்கிருரென்று வெளிநாட்டவர் கூறியதின் பின் தான் அறிய நேர்ந்தது.

இவருக்குமுன் அதிபர்கள் வருவார்கள் போவார்கள். ஒருவராவது சிலகாலமிருந்து வித்தியாலயத்தை அபிவிருத்தி செய்வோமென்று நினைக்க வில்லைப் போலும். ஆனுல் அமரர் அம்பிகைபாகன் வித்தியாலயத்தில் கடமை ஏற்றவுடன் இந்தக் கல்லூரியிலேயே நான் கடமை செய்யப்போகிறேன். இதை ஓர் உன்னத நிலைக்கு கொண்டு வரப் போகிறேன் என்று எண்ணிவிட்டார் போலத் தெரிகிறது. இவருக்கு பக்கபலமாக ஆசிரியர் வைரமுத்துவும் ஆசிரியர் சீனிவாசகமும் இருந்தார்கள். படிப்படியாக இச்சிறு வித்தியாலயத்தை ஓர் பெரிய வித்தியாலயம் ஆக்கினுர்கள் இம்மூவரும்.

அமரர் அம்பிகைபாகனின் முதல் பதினைந்து வருடங்கள் ஓடி முடிந்தன. அத் தருணத்தில் அதாவது 1949-ம் ஆண்டில் வித்தியாலய வருடாந்த விளையாட்டுப்போட்டிக்கு என்னை சமூகமளிக்கும்படி கேட்டார் அமரர் அம்பிகைபாகன், அக்காலத்தில் நான் வவனியாவில் அரசாங்க அதிபராக இருந்தேன். கூறப்பட்ட தினம் மோட்டார் வண்டி மூலம் யாழ். முற்றவெளிக்குச் சென்றேன். சிறிது தூரத்திலிருந்து பார்த்தால் ஒரு பெரிய கல்லூரியின் விளையாட்டு விழா போலத் தோன்றவே மோட்டாரை நிற்பாட்டி வழிப்போக்கன் ஒருவரிடம் விசாரித்தேன். இவர் இதுதான் வண்ணை வித்தியாலய விளையாட்டு விழாவென்ருர். என்னுல் நம்பவேமுடியவில்லை. நான்உள்ளே சென்று பார்வையிட்டபொழுது 500 மாணவர்களுடன் இருந்த கல்லூரி இப்பொழுது இரண்டாயிரத்தை தாண்டிவிட்டதென்று தெரிந்தது.

இதற்குப் பிறகு 1960 ம் ஆண்டு வித்தியாலயத்திற்கு நான் சென்றபொழுது புதுப்புது கட்டிடங்களை கண்டு வியந்தேன். இதெல்லாம் இப்பெரியாரின் பிரயாசையால் உருவானவை. ஒரு வித்தியாலயத்திற்கு தேவையான நூல் நிலையம், விஞ்ஞான ஆய்வுகூடம், விளையாட்டு மைதானம் எல்லாம் உருவாகி ஒரு சிறந்த கல்லூரியாக காட்சியளித்தது.

இவர் அதிபராகி 25 ஆண்டுகளை குறிக்கும் முகமாக நடந்த வெள்ளி விழாவில் நானும் கலந்துகொண்டேன். அன்று நான் கூறியதை இன்றும் கூறுகின்றேன். எவர் ஒருவர் ஒரு கருமத்தை சிரத்தையோடு தொடர்ந்து பல ஆண்டுகள் செய்தால், கட்டாயம் வெற்றி காணலாம். இதைத்தான் அமரர் வித்தியாலயத்தின் முன்னேற்றத்தின் மூலம் காட்டினுர்.

எப்படி எனது தந்தையார் அக்காலத்து வண்ணுர்பண்ணை பெரியார்களின் உதவி, ஒத்தாசையை பெற்ருரோ அந்த போல் அமரர் அம்பிகைபாகனும் பெற்ருர். தந்தையார் இக்கல்லூரியை தாபித்தார். அமரர் அம்பிகைபாகன் இதை வளர்த்து ஒரு பெரிய விருட்சமாக்கினுர்.

அமரர் அம்பிகைபாகன் கல்லூரிக்கு வெளியே பல அரிய பெரிய கருமங்களை செய்தார் சைவத்திற்கும், தமிழ்மொழிக்கும் தன் கடமையை செவ்வனே செய்தார். இவர் பொது மக்களுக்கும் கல்லூரிக்கும் கடமை செய்வதை பார்த்தால் இவருக்கு ஒரு குடும்பம் இருக்கிறதா அப்படி இருந்தால் அவர்களுடன் பேசப் பழக எங்கே நேரம் இருக்கிறதென்று பலமுறை யோசித்தேன். இப்படிப்பட்டவர்கள் எம் மத்தியில் வாழ்வதால் தான் நாங்களும் ஒரு இனம் என்று இருக்கிருேம்.

இப் பெரியாருக்கு யாழ்ப்பாண மக்களாகிய நாம் என்ன கைமாறு செய்யப்போகிருேம். இவரை மறக்காது இருப்பதென்ருல் வைத்தீஸ்வரா வித்தியாலயத்தில் இவர் ஞாபகமாக ஒரு தகுதியான கருமத்தை செய்யலாம். இவரின் நண்பர்கள், மாணவர்கள் ஒன்று கூடி ஒரு நல்ல முடிவை எடுக்க ஆசைப்படுகிறேன்.

இவருடைய ஆத்ம சாந்திக்கு எல்லாம் வல்ல இறை அருள் புரிவாராக.

நா. மாணிக்க இடைக்காடர்

## பாலமாக திகழ்ந்தவர்

(பண்டத்தரிப்பு)

''கிழக்கு இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் பாடுபட்டு வந்த அமரர் கணேசலிங்கம் வடக்கு கிழக்கு பகுதிகளுக்கு ஒரு பாலமாகத் திகழ்ந்தவர். தமிழ் மக்களின் சுதந்திரப் போராட்டம் உச்சக்கட்ட நிலையை அடைந்திருக்கும் இவ் வேளையில் அவரின் மறைவு எமது தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் தமிழ் பேசும் இனத்திற்கும் பெரும் இழப்பாகும்.''

இவ்வாறு வட்டுக்கோட்டை தொகுதி தமிழர் விடுதலைக் கூட்டணியின் சார்பில் அதன் உப தலைவர் திரு. சு. நடேசு பட்டிருப்பு முன்னுள் எம். பி அமரர் பூ. கணேசலிங்கம் மறைவு குறித்து அன்னுரின் குடும்பத்தினருக்கு அனுப்பி வைத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்,

''கட்சியின் வளர்ச்சிக்கும், தமிழ் மக்களின் நலனுக்கும் அயராது உழைத்த அமரர் கணேசலிங்கம் அவர்களின் திடீர் மறைவு எம்மை பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கி விட்டது இன்றைய பதற்ற நிலை காரணமாக அன்னுரின் ஈமச் சடங்குகளில் நேரில் வந்து கலந்து கொள்ள முடியாது போய் விட்டதற்குவருந்துகின்ருேம்'' என்று திரு நடேசு தமது அனுதாபச்செய்தியில் மேலும்தெரிவித்துள்ளார்.

## மருந்து தட்டுப்பாடு நீங்கியது

[நயினுதீவு]

நயினுதீவு வைத்தியசாலையில் ஏற்பட்ட மருந்து தட்டுப்பாடு நீங்கியது.

போதியளவு மருந்து கைவசம் இல்லாமையினுல் வைத்தியசாலையையே மூடிவிடும் இக்கட்டான நிலை ஏற்பட்டதாம்.

வைத்தியசாலையில் மருந்துத் தட்டுப்பாட்டை நீக்கி போதியளவு மருந்துகளை பெற்றுக் கொடுக்க உதவிசெய்த வைத்தியசாலை ஊழியர் திரு. முமகாலிங்கத்தின் சேவையை [illegible] பாராட்டியுள்ளனர்.

## முன்னேஸ்வர நாதா!

முன்னேஸ் வரநாதா! முன்னுளில் ராமபிரான்
அன்போடுனைவணங்க ஆதரித்தாய் —இந்நாளின்
ஊறுபடும் நந்தமிழர் ஓதுவதும் நின்செவியில்
ஏறுகிற தில்லையோ? இங்கு.

## திருச்செந்தூரில் வீற்றிருக்கும் வேன்முருகா!

ஆறுபடை வீட்டில் அலைமோதுஞ் செந்தூரில்
வீறுடனே வீற்றிருக்கும் வேன்முருகா —கூறுமிந்த
ஈழத்துச் செந்தமிழர் எய்தும் துயர்களைந்து
வாழவருள் செய்வாய் நீ வந்து.

## புருடா விடாதே

கெருடாவிற் கந்தா! நற் கெங்கையருள் மைந்தா!!
புருடா விடாதே புவியில்—முருகா! நீ
செந்தமிழர் தெய்வமெனச் செப்புகிற தேயுலகம்
எந்தமிழர்க் கென்செய்தாய்? ஈங்கு.

## நாவலப்பிட்டி முத்துமாரித் தாயே!

நாவலப் பிட்டிதனில் நன்ருய்க் குடியமர்ந்து
காவல் புரிகின்ற காமாட்சீ!—சேவலம் சீ!
முத்துமா ரித்தாயே! மூர்க்கரின் தாக்குதலாற்
செத்தழிகின் ருேமருளைச் செய்.

## புவக்பிட்டி முத்துமாரியம்மா!

புவக்பிட்டி சேர்முத்து மாரியெனுந் தாயே!
தவக்குறை வாற்றமிழர் சான—அவலமுற்று
சொத்துச் சுகமிழந்து செத்துமடிகின்ருரே
நித்திரைகொள் கின்ருயோ நீ.

கவியரசு முருகசூரியன்

★ இவ்வாலயங்களில் இன்று கொடியேற்றம் நடைபெறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பிகைபாகன் நினைவு ஈழநாடு சிறப்பு மலர்

## அறிஞர் அம்பிகைபாகன்



யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியம் உலகறிந்தது. அறிஞர் பலரின் தியாகமும் அயரா உழைப்பும் அதன் தளரா வளர்ச்சிக்குத் துணைநின்றன.

வைத்தீஸ்வரவித்தியாலய அதிபராக நீண்ட காலம் பணிபுரிந்த அறிஞர் அம்பிகைபாகன்அவர்களுக்கு யாழ்ப்பாணத்துக் கல்வி வளர்ச்சியிற் பெரும் பங்கு உண்டு. அவரது அறிவு, ஆற்றல், அயரா உழைப்பு எந்த நேரமும் புன்னகை தவழும் முகம் இன்சொல் இவை அனைத்தும் அவருடைய கல்விச் சாதனைகளுக்குக் காரணங்களாயின.

### இலக்கியப் பணி

தமிழ் இலக்கிய வளர்ச்சிக்காக மேடைகள் தோறும் இலக்கியப் பேச்சுக்கள் நிகழ்த்தினர். தமக்குத் தமிழ்நாட்டில் இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தித் தமிழ் அறிஞர்களை இங்கு வரவழைத்து சொற்பொழிவுகளை ஒழுங்குசெய்ய உதவியாக இருந்தார். எல்லோர் மனத்திலும் இலக்கிய ஆர்வம் கங்கையைப்போல்—காவிரிபோல் பெருக்கெடுக்கவேண்டும் என்று பேரவாக் கொண்டார்.

**கே. சி. தங்கராஜா**

**(தலைவர், ஈழநாடு நிறுவனம்)**

### சமயப் பணி

ஆலயங்களில் புராணபடனம் சிறப்பாக நடைபெற வேண்டும். அதன்மூலம்தான் சமய அறிவும் கலாசாரமும் சைவர்களிடம் பெருகிப் பயன்செய்ய முடியும் என்று அவர் நம்பினர். சைவ அறிஞர்களைத் தேடிச் சென்று புராணபடன ஒழுங்குகளைச்செய்தார். தாமும் புராணம் படித்தார்; பயன் சொன்னர். அத்துடன் சமயச் சொற்பொழிவுகளும் நிகழ்த்தினர்.

### நிர்வாகச் சிறப்பு

சிறந்த காந்தீயவாதியான இவர் புன்னகையைக் கொண்டு நிர்வாகம் சிறப்பாகப் ஆற்றமுடியும் என்பதை நிரூபித்துக்காட்டியவர். இவரைக்கொண்டு இன்ன கருமத்தை முடிக்க முடியுமென்பதை ஆராய்ந்து அதற்குரியவரைத் தேர்ந்து பணியை ஒப்புவித்துவிட்டு நிம்மதியாக இருப்பார். அவர் ஒப்புவிக்கும் பணி மிகச்சிறப்பாக எவ்வித ஆரவாரமுமின்றி நிறைவேறும்.

### ஈழநாடு'' தொடர்பு

'ஈழநாடு'பத்திரிகையின் ஆரம்பகாலமுதற்கொண்டே 'ஈழநாட்டின் வளர்ச்சியில் பெரும் அக்கறைகாட்டி வந்தவர் அமரர்அம்பிகைபாகன்.ஈழநாடுபத்திரிகையில் காலத்துக்குக்காலம் சிறந்த பல கட்டுரைகளை எழுதி வந்திருக்கிருர். அறிஞர்களை எழுதுமாறு வேண்டி இருக்கிருர். 'ஈழநாட்'டின் வளர்ச்சிக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கிவந்திருக்கிருர்.

இத்தகைய சிறப்புக்கள்கொண்ட அம்பிகைபாகன் அவர்களது மறைவு இலக்கிய உலகிற்கும் சமய உலகிற்கும் பத்திரிகை உலகிற்கும் பெரும் இழப்பு என்றே கூறவேண்டும்.

## கல்வி உலகிற் பிரசித்திபெற்றவர்

இந்த நூற்றுண்டின் நடுப்பகுதியில், ஒட்டிப்பிறந்த இரட்டையர்களென இங்கே யாவரும் பாராட்டத்தக்க வகையில் தங்கள்வாழ்க்கையை அமைத்துக்கொண்டவர்கள் இருவர் பெரியார்கள். ஒருவர் கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள். மற்றவர் வைத்தீஸ்வர வித்தியாலய முன்னைநாள் அதிபர் திரு ச. அம்பிகைபாகன் B A. அவர்கள். ஒருவருக்கொருவர் உதவியாக மேற்குறித்த இருவரும் எடுத்த நன்முயற்சிகள் பெரிதும் வரவேற்கக்கூடியனவாகவே இருந்தன. இவர்கள் இருவரும யோகர்சுவாமிகளின் அருளாசியையும் பெற்றிருந்தார்கள். கலைப்புலவர் அவர்கள் முன்னமே எம்மைவிட்டுப் பிரிந்து விட்டார்கள்.

பன்மொழிப்புலவர் டாக்டர் தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் ''திரு ச.அம்பிகைபாகன் அவர்கள் மதருஸ் பிரசிடென்சிக்கல்லூரி மாணவராவர். இக்கல்லூரியின் பிரதான தமிழ்ப் பேராசிரியராக இருந்த நான் இவரை ''பிரசிடென்சி மாணவர்'' என்று அழைப்பதில் பெருமையடைகின்றேன். இவர் கலைப்புலவரின் வலது கை. யோக சுவாமிகளின் ஆர்வமுள்ள சீஷனுமாவர். இவர் யாழ்ப்பாணத்தில் நடந்த தமிழ் விழாவுக்குப் பொறுப்பாக இருந்த முக்கியஸ்தர்களுள் ஒருவராவர். சுருங்கக் கூறின் இவர், யாழ்ப்பாணத்தில் நடந்த ஒவ்வொரு கலாசார நிகழ்ச்சிகளுடனும் நெருங்கிய தொடர்புடையராக இருந்தார்.

**இலக்கிய கலாநிதி**

**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**

''தமிழ் எழுத்தாளர் என்ற வகையிலும் பேச்சாளர் என்ற வகையிலும் இவர் செல்வாக்குள்ளவராகவும் இருந்தார். இப்படிப்பட்டவர் ஒருவரை எனது நண்பன் என்று சொல்வது எனக்குக்கிடைத்த வரப்பிரசாதம் என எண்ணுகிறேன்'' என்று குறிப்பிட்டிருக்கின்ருர்கள்.

''தாய் நாட்டினரும், சேய் நாட்டினரும் புகழும் வண்ணம், கல்வி உலகில் பிரசித்தி பெற்றவரான அம்பிகைபாகன் அவர்கள் எனது உள்ளங்கவர்ந்த அன்பர் என்று கூறுவதில் பெருமகிழ்ச்சியடைந்து வந்தேன்.

''நீண்டகாலம் பயன்மரம் உள்ளூர்ப்பழுத்தாற் போன்று யாவருக்கும் பயன்செய்து வாழ்வாராக'' என்று ஒருசமயம் வாழ்த்திய யான் அன்னரின் ஆன்ம சாந்தியின் பொருட்டுப் பிரார்த்திக்கும் நிலையை இப்பொழுது எய்தியிருப்பது பெருங்கவலையைத் தருகின்றது. என்னிலும் பத்து ஆண்டுகள் இளைஞராயினும், என்னை அவர் வெற்றிகொண்டு விட்டார்.

''அறிஞர் ச அம்பிகைபாகன்அவர்களதுஆன்மசாந்தியின் பொருட்டு, அவர்களின் மனைவி,மக்கள், மருகர்,பேரர், உற்ருர், உறவினர், நண்பர்கள் உள்ளிட்ட அனைவரும் திருவருளை வேண்டிப் பிரார்த்திப்பார்களாக.''

## ஆராய்ச்சியாளர் அமரர் அம்பிகைபாகன்

பதவியில் இருந்து இளைப்பாறியபின்னும தங்கள்வாழ்க்கைகையை சமயத்திற்கும், சமூகத்திற்கும். இலக்கியத்திற்கும் பயனுள்ளதாக வாழ்கின்றவர்கள் ஒருசிலரே. அண்மையில் அமரத்துவமடைந்த நண்பன் அம்பிகைபாகன் இவர்களில் ஒரு தலைசிறந்தவர். நீண்ட வாழ்வு நிறைந்த வாழ்வு ஆவதற்கு ஏதாவது ஒருதுறையில் நிலைத்துநிற்கக் கூடிய சாதனை செய்துமுடிக்க வேண்டும் என்பதுஅவருடைய கொள்கை. அதிபராய் இருக்கும்போதே நூலாராய்ச்சிகளில் கூடுதலான ஈடுபாடு உடைவராய் இருந்தார். இளைப்பாறியபின் தனக்குக் கிடைத்த ஆறுதலைப் பயன்படுத்தி ஆராய்ச்சியால் தான் தேடிக் கண்ட ஆழ்ந்த கருத்துக்களை கட்டுரைகள் மூலமும் அறிக்கைகள் மூலமும் வெளியிட்டார் 1981ல் மதுரையில் நடந்த உலகத்தமிழ்மகாநாட்டில் பங்குபற்றி ''ஈழநாடும் தமிழ் சங்கங்களும்'' என்ற விடயத்தில் ஒருஅரிய ஆராய்ச்சிக் கட்டுரையை சமர்ப்பித்தார். இக்கட்டுரைக்கு தெரியாத பல முக்கியவிடயங்கள் அதில் அடங்கியிருந்தன. சர்வகலாசாலைக் கல்விசம்பந்தமான பிரச்னைகளைப் பற்றி பல அறிஞர்களினதும், கமிஷன்களினதும் கருத்துக்களை ஆராய்ந்து தமிழ் பல்கலைக் கழக, கலாசாரப் பல்கலைக் கழக. இயக்கங்களையும், இந்தியாவின் முன்மாதிரியையும் பின்னணியில் வைத்து இட நெருக்கடி, ஆசிரிய-மாணவர் உறவு, மொழிவாரித் தரப்படுத்தல் போன்ற பலவற்றை பல கோணங்களில் புள்ளிவிபரங்களுடன் தீர்க்க ஆராய்ந்து அரிய ஓர் அறிக்கை எழுதி பிரசுரித்தார் இவை அவருடைய ஆழ்ந்தசிந்தனைக்கும்,

[6-ம் பக்கம் பார்க்க]

**ஓய்வுபெற்ற**

**சி.சுப்பிரமணியம்**

**இளைப்பாறிய அதிபர்**



அறிஞர் அம்பிகைபாகனுடன் அறிஞர் வண. பிதா எவ். எக்ஸ். தனிநாயகம் அடிகளும் அளவையூர் மயில் வாகனனுர் (காலஞ்சென்ற அரசஅதிபர் திரு ஸ்ரீகாந்தாவின் தந்தை) அவர்களும் படத்தில் காணப்படுகின்றர்.

## அம்பிகைபாகனுக்கு கி. வா. ஜ. எழுதிய ஒரு கடிதம்

அன்புடையீர்,

வணக்கம்

வரும் ஞாயிறன்று (29 - 09 - 57) காலையில் இங்கேவிமானம் ஏறி நண்பகலில் யாழ்ப்பாணத்துக்குத் தமிழ்நாட்டு எழுத்தாளர் சிலர் வருகின்றனர். பல நாவல்களும், சிறுகதைகளும் எழுதிப் புகழ்பெற்ற மாயாவி, கலைமகள் நாவல் பரிசு ஆயிரம் ரூபா பெற்ற ரஸவாதி, பல அரிய கட்டுரைகளை எழுதும் மகரம், சிறுகதை எழுத்தாளர் ரா.பாலகிருஷ்ணன், ஊக்கமுடைய பேச்சாளர் அன்புப்பழம்நீ ஆகியோர் இலங்கையை ஒருமுறை சுற்றிப்பார்த்து இன்புறும் பொருட்டு வருகிருர்கள். இதற்கு முன்பு அங்கே வராதவர்கள் ஆதலின், அவர்களுக்கு இடம்புதிது,

[8ம் பக்கம் பார்க்க]

## அம்பிகைபாகன் பற்றி 'கல்கி'

பேராசிரியர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 1954ல் யாழ்ப்பாணச் சுற்றுலா வந்து தமிழகம் திரும்பியதும் கல்கி ஏட்டில் 'இலங்கையில் ஒரு வாரம்' என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரைத் தொடரில் 'யாழ்ப்பாண ஞாபகங்கள்' பற்றி எழுதுகையில் அறிஞர் ச. அம்பிகைபாகன் பற்றி எழுதிய குறிப்புகளில் ஒரு பகுதி இது.

...அந்த நாளிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் எனக்கும் மனே உலகில் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. பிற்பாடு இந்த உறவு வளருவதற்குரிய மூன்று ஏதுக்கள் ஏற்பட்டன. ஒன்று. தேச சேவை; இரண்டாவது,சமயப்பற்று; மூன்ருவது தமிழபிமானம். இந்த மூன்றுக்கும் பிரதிநிதிகளாக எனக்கு மூன்று நண்பர்கள் ஏற்பட்டார்கள் அவர்கள்: ஸ்ரீசிவகுருநாதன், ஸ்ரீஅம்பிகைபாகன்; ஸ்ரீசிவபாதசுந்தரம் என்பவர்கள்...

ஸ்ரீஅம்பிகைபாகன் சென்னை பிரஸிடென்சி கலாசாலையில் படித்துக்கொண்டிருந்தபோது,அவரைஒருநாள் ஸ்ரீஇராமகிருஷ்ண மடத்தில் சந்தித்கேன் பெண்ணைப் பெற்ற தகப்பனுர் யாராயிருந்தாலும் சரிதான், இந்தப் பிள்ளையாண்டானை அவர் பார்த்தாராளுல் உடனே ஒரே ஒரு எண்ணம்தான் தோன்றும் எந்தப் பாக்கியசாலி இந்தப் பையனுக்கு மாமனுராகப்போகின்ருரோ?'' என்றுதான் அவர் நினைப்பார். அப்படிப் பட்ட பிள்ளையைச் சந்நியாசிகளின் மடத்தில் பார்த்ததும் எனக்குக் கொஞ்சம் சொரேல் என்றது. சமயப் பற்றும், சமூகத்தொண்டில் ஆர்வமும் அப்போதே இவரிடம் காணப்பட்டன. தற்சமயம் ஸ்ரீ அம்பிகைபாகன், யாழ்ப்பாணத்தில் சுவாமி விபுலாநந்தர் அவர்களால் நடத்தப்பட்டுவரும் ஸ்ரீவைத்தீஸ்வர வித்தியாலயத்தில் தலைமை ஆசிரியராக இருந்துவருகிருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வித்தியாலயத்தை வளர்த்த பண்பாளர்

**அ**திபர் திரு. ச. அம்பிகைபாகனைப் பற்றி எண்ணும்போது இரு வேறு உருவங்கள் என் கண்முன்னே தோன்றுகின்றன. நெருங்கிப் பழகமுன் அவரது தோற்றம்பற்றி நான் கொண்டிருந்த கருத்து ஒரு விதமானது நெருங்கிப் பழகியபின் அவரது தோற்றம் பற்றி நான் கொண்டிருந்த கருத்து இன்னொரு விதமானதாகும். பாடசாலையிற் சேர்ந்த முதல்நாள் அதிபரைப் பற்றி அறிய ஆவல் எழுந்தது. அருகிலிருந்த மாணவன் ஒருவனிடம் அதிபர் எப்படி? என்று கேட்டேன். ''அவரா, அவர் ஒரு நெருப்பு'' என்ற பதில் மட்டுமே கிடைத்தது. கிடைத்த முதல் தகவலே அதிர்ச்சியாக இருந்தது. அந்த அதிர்ச்சி நீங்குமுன் ''ஆங்'' என்ற சத்தம் அந்தச் சிறு ஓலைக்கொட்டிலை அதிரச் செய்தது. ''அதோ வருகிறார்'' என்று அருகிலிருந்த மாணவன் காதினுள் குசுகுசுத்தான். ''சந்தைக் கடையாக''இருந்த கொட்டில் ''தியான மண்டபமாக'' மாறியதை அன்றுநான் பிரத்தியட்சமாகக் காணக்கூடியதாயிருந்தது. துணிவை வரவழைத்துக் கொண்டு மெல்ல நிமிர்ந்து வகுப்பறையின் வாசலினூடாகப் பார்த்தேன். வெள்ளை வெளேரென்ற உருவம்; அதற்கு அழகூட்டுவதுபோல தும்பைப் பூப் போன்ற வேட்டியும் மேலங்கியும்; தோள்களிலே மடித்துச் சலவை செய்யப்பட்ட விசிறிச்சால்வை; கண்களில் ஒளிரும் பிரகாசத்திற்குக் கண்ணூறு கழிப்பது போல் கண்களில் கண்ணுடி; அறிவு முதிர்ச்சியைப் பறைசாற்றுவது போல் சற்றே விழுந்த வழுக்கை ஆகியவற்றுடன் நிலத்தைத் தொடும் வகையில் பிரம்பொன்று நீட்டிக் கொண்டிருக்க அதிபர் அவர்கள் நின்ருர்கள். வெள்ளை தூய்மையைக் குறிப்பதல்லவா! சாந்தத்துக்கு அது தானே சின்னம்! தூயவெள்ளை ஆடையணியும் இவரை ஏன் நெருப்பு என்று குறிப்பிட்டார் அந்த மாணவன் என்று என்மனம் யோசித்தது. ஆனல் அடங்கிக் கிடக்கும் எரிமலை குமுறுவதும் உண்டு என்பதை அனுபவத்தின் மூலம் உணர்ந்து கொள்ளும் துர்ப்பாக்கியமான நிலை எனக்குப் பல முறை ஏற்பட்டது. ஆம்! உண்மைதான்! அவர் ஒரு நெருப்பு. நெருப்புத்தானே தங்கத்தின் மதிப்பை உயர்த்துகிறது. இதனுற்றுனே தூய ஒனும் மேலவனும் ஆன கண்ணபிரானுக்கு அதிகச் சூட்டை அளிக்க வல்ல நெருப்புச் சுவாலையாகிய நீலநிறத்தைச் சான்ருேர் உரியதாக்கியிருக்கின்றனர். இத்தகைய ''நெருப்பாக'' அதிபர் இருந்திராவிட்டால் வயது வந்த ஆணும் பெண்ணும் கல்விகற்கும் ஒரு மிகப்பெரிய பாடசாலையை எவ்வாறு திறமையுடன் நிர்வகித்திருக்க முடியும் என்று தற்போது எண்ணத் தோன்றுகிறது.

சிறு குடிலாக இருந்த வைத்தீஸ்வர வித்தியாலயத்தைப் பிரமாண்டமான மண்டபங்களாக மாற்றியமைத்த பெருமை திருவாளர் அம்பிகைபாகனையும் அவர்க்குப் ''பாகமாய்'' இருந்து பெருந் தொண்டாற்றிய உப அதிபர் திரு. வைரமுத்து அவர்களையுமே சாரும். தமக்காக வாழாது பிறர்க்காக, பிறரது கல்விக்காக வாழ்ந்து கைம்மாறு எதிர்பாராது வாழ்ந்த இவ்விருவரையும் எவருமே மறப்பதற்கில்லை. அவர்களது பேச்சும், மூச்சும் வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்காகவே செலவிடப்பட்டன வெனில் அது மிகையாகாது. இதற்காக அவர்கள் நிதி திரட்டுவதற்கு எடுத்த முயற்சிகளையெல்லாம் நோக்கும் போது ஊனை பாலாக்கித் தன் சேய்களளிக்கும் தாயின் பெருந்தன்மையே நினைவுக்கு வருகின்றது.

நினைவலைகள் நீண்டு கொண்டே போகும். எதற்கும் ஒரு எல்லையுண்டல்லவா? அதிபரவர்கள் இளைப்பாறப் போகிருர்கள். அதை நினைக்கும் போது ஒரு சூனியநிலை தோன்றுகிறது. வித்தியாலயத்தின் வளர்ச்சிக்கு அல்லும் பகலும் பாடுபட்டு தம்மையேதேய்த்து அழித்துக் கொண்ட சந்தனக் கட்டையான உப அதிபர் திரு. வைரமுத்து அவர்கள் இளைப்பாறியதால்ஏற்பட்ட அதிர்ச்சி நீங்குமுன்னரே இன்னொரு அதிர்ச்சியை ஏற்கவேண்டிய துர்ப்பாக்கியமான நிலை வைத்தீஸ்வராக் கல்லூரிக்கும், அதன் ஆசிரியர் குழாத்துக்கும், பழைய மாணவர்கட்கும் ஏற்பட்டிருக்கிறது. விதியை யார்தான் வெல்லமுடியம்? திறமையும் ஆற்றலும் மிக்க ஒருவரின் சேவையை ஒரு தனித் தாபனத்துக்கே உரியதாகுமாறு விட்டுவைக்க இறைவனுக்கு விருப்பமில்லைப் போலும் அவர் தம் சேவை குறுகிய வட்டத்துக்குள் அமைந்துவிடக்கூடாது; அது பரவ வேண்டும்; ஆல்போல் தழைத்து அண்டி வருவோருக்கு நிழலாய் அமைய வேண்டுமென்று பரம்பொருள் விரும்பியது போலும், ஆனல் அவரது சேவை பரம்பரை பரம்பரையாய்க் கிடைத்து வந்த ஒரு கல்வி நிலையத்துக்கு இல்லாது போவது துக்ககரமான தொன்ருகும். உபஅதிபரவர்கள் இளைப்பாற எண்ணம் கொண்டபோதே திருவாளர் அம்பிகைபாகன் அவர்களும் இளைப்பாற எண்ணியிருக்க வேண்டும் என நான் கருதுகிறேன். அம்பிகைபாகனுகிய சிவனுக்குப் பாகமாய் உப அதிபர் திரு. வைரமுத்து அவர்கள் விளங்கினுர்கள். ''சக்தியின்றேல் சிவமில்லை சிவமின்றேல் சக்தியில்லை'' என்பது ஆன்ருேர் வாக்கு. ஆனல் இங்கே ''பாகம்'' இல்லாமலே அதிபரவர்கள் சிறிது காலம் இயங்கவேண்டியிருந்தது. அது இளைப்பாறும் அவரது எண்ணத்தை வலுவடையச் செய்து விட்டது போலும். இந்த இழப்பை ஈடுசெய்வது மிகமிகக் கஷ்டமானதாகும், எனினும் தங்கள் நடத்தையாற் பிறருக்கு முன்னேடியாக விளங்கிய இவ்விருவரும் தம்மையறியாமலே ஒரு வாரிசை உருவாக்கியிருப்பார்கள் என்றே நான் நம்புகிறேன். ஏனெனில வைத்தீஸ்வர வித்தியாலயத்தின் பழைய மாணவர் ஒருவரை அதிபராகக் கொண்ட பாடசாலை ஒன்றில் சிறுகாலம் ஆசிரியனுகக் கடமையாற்றிய அனுபவம் எனக்குண்டு. இவ்விருவர்களின் அடியொற்றிக் கடமையாற்றும் எவருக்கும் தாழ்வு ஏற்படாது என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டது.

அமரத்துவமடைந்த எமது அதிபர் இளைப்பாறிய பின்னரும் எம்மிற்பலர் எதிர் பார்த்தவண்ணம் தமது பரந்த தன்னலமற்ற சேவையை தமது சமுதாயத்துக்கு அளித்து வந்தார். இவரின் மறைவால் தமிழன்னை தன்நலம் பேணிய நல்மகனை இழந்தது, வைத்தீஸ்வர வித்தியாலயம் தனது சிறப்பை இழந்தது.

இந்த இழப்பை நாம் தாங்கும் வகையில் இறைவன் அவருடைய ஆன்மாவுக்கு சாந்தி அளிக்க வேண்டுமென்று இறைஞ்சுவோம்.

**எம். எம். மக்பூல்**
(இலங்கை நிர்வாகசேவை)



## ஆசிரியர் ஹரன் எழுதியது

''ஈழநாடு' நிர்வாக ஆசிரியராகப் பணியாற்றிய திரு. கே பி. ஹரன் அவர்கள் முன்னர் 'வீரகேசரி' பத்திரிகையின் பிரதம ஆசிரியராகப் பணியாற்றிய போது யாழ்ப்பாணம் வந்து கொழும்பு திரும்பியதும் அம்பிகைபாகனுருக்கு எழுதிய கடிதம் இது:

''அன்புருவாய அம்பிகைபாகன் அவர்களுக்கு
வணக்கம்.

''யாழ்ப்பாணத்திலிருந்து இங்கு திரும்பி பத்து நாட்கள் ஆகின்றனவெனினும், இன்னும் என்மனம் தங்களுடன் அதே சூழ்நிலையில் சுழன்று சுழன்று எண்ணி எண்ணி இன்புறுகின்றது. பாலைவனத்திலிருந்தவன் பசுஞ்சோலையைக் கண்டதுபோல் உணர்கிறேன்.

''தாங்கள் காட்டிய அளவு கடந்த அன்புக்கு நான் எங்ஙனம் பாத்திரமாவேன்; அதற்கு எவ்விதம் கைமாறு செய்வது என்பது விளங்கவில்லை. தாங்களும் தங்கள் அழகான குடும்பத்தாரும் நீடூழி வாழ்ந்து மேன்மேலும் அன்புப் பணியைச் செய்ய நல்லூர் முருகனை மனமாரப் பிரார்த்திக்கிறேன்.

'பெரியவர் தரிசனம் கிடைத்தது என் பாக்கியம். நல்லூர்க் கந்தனும் பெரியவரும் இருக்கும்வரை யாழ்ப்பாணத்துக்கு என்ன குறை? ஏது பயம்?

தங்கள் அன்பு மறவாத
**கே பி. ஹரன்**

# ஆராய்ச்சியாளர் அமரர் அம்பிகைபாகன்

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

அயராத ஆராய்ச்சிக்கும் சான்றுபகரும். அண்மையில் கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்களைப் பற்றியும், யாழ். இந்துக்கல்லூரி ஸ்தாபகர் அப்புக்காத்து நாகலிங்கம் அவர்களைப் பற்றியும் எழுதிய அவருடைய கட்டுரைகள் ஈழநாட்டில் வெளிவந்தன.

## இரு மேடைகள்

இதேபோல் இன்னும்பல ஆராய்ச்சிகள் செய்ய எண்ணியிருந்தார், ''புத்துவாட்டி வீடு'' என்று பல முதியோரால் போற்றப்படும் தாபனம் ஒன்று இப்பொழுது மனோகரா படமாளிகை இருக்கும் இடத்தில் பல்லாண்டுகளுக்குமுன் இயங்கிவந்தது. அதேகாலகட்டத்தில் கொழும்பில் ''டவர் ஹோல்'' (Tower Hall) நாடக மேடையில், 'சிறீசங்கபோ', மரீனு பாண' போன்ற நாடகங்கள் நடிக்கப்பட்டன. இவை சிங்கள மக்களுக்கு சுதந்திர உணர்ச்சியை எப்படி யூட்டியதோ, அதேபோல 'புத்துவாட்டி' வீட்டு மேடையில் நடிக்கப்பட்ட நாடகங்கள் யாழ்ப்பாணத்தவர்களுக்கு இந்திய சுதந்திர இயக்கத்திலும். சுதந்திர வீரர்கள் மேலும் தீவிர ஈடுபாட்டையும் தேசாபிமானத்தையும் உண்டுபண்ணின. எட்டயபுரம் சமஸ்தான சங்கீத வித்துவான் M. R கோவிந்தசாமிபிள்ளை இம் மேடையில் பல ஆண்டுகள் தோன்றி அபூர்வமாக பாடி நடித்தார். அவருடைய கமாஸ் ராகத்தில் 'கழுகுமலை கந்தன்', பைரவியில் ''வாவா வள்ளி மணளா'' என்ற கழுகுமலைகந்தன் பேரில் பாடிய கீர்த்தனங்கள் இன்றும் சிலருடைய செவிகளில் ஒலிக்கின்றன. அவரைப்போல் பல தென்னிந்திய கலைவாணர்கள் இங்கு நடித்தனர். கொழும்பு 'டவர் ஹோல்' (Tower Hall) நாடகமேடை ஆற்றிய பணிகளைப் பற்றி அண்மையில் ஆராய்ச்சி நடத்தியதுபோல். 'புத்துவாட்டி வீட்டை'யும் அதனுடைய கலைத் தொண்டுகளையும் ஆராய்ச்செய்ய வேண்டும் என்று பலமுறை எனக்கு சொல்லி இருக்கிறுர் அவருக்கு வண்ணார்பண்ணை தொடர்புகள் அதிகம் இருந்தபடியால் அதைத் திறம்படச் செய்யமுடியும் என்று சொன்னேன். செய்திருப்பார். ஆனல் காலன்... அதேபோல் கலாயோகி ஆனந்தகுமாரசாமி அவர்களின் நூல்களில் சில பகுதிகளை தமிழ் மரபுக்கேற்ப மொழிபெயர்க்க வேண்டும் என்றும் திட்டம்போட்டிருந்தார். ஆனல் காலன் இவற்றுக்கு முற்றுப்புள்ளி இட்டு விட்டான். இவற்றை நினைக்கும்போதெல்லாம் இவருடைய மறைவு எவ்வளவுக்கு ஈடுசெய்யமுடியாதது என்பதை உணருகிறோம்.

## மும்மூர்த்திகள்

20ம் நூற்றுண்டின் முற்பகுதியில் மொழி, சமய, கலை மறுமலர்ச்சி உதயமாகியது. இதற்கு காரணகர்த்தாக்களாக இருந்தவர்கள் மும்மூர்த்திகள்- இன்றும் எங்கள் மத்தியில் ஆரோக்கியத்துடன் இருக்கும் சைவப் பெரியார் மு மயில்வாகனம், பண்டிதர் மயில்வாகனம் (விபுலாநந்த அடிகளார்) நவரத்தினம் (கலைப்புலவர்) இவர்களுடைய லட்சியவேகத்தில் காலத்துக்குக்காலம் கவரப்பட்டவர்கள் பலர் — கே சி தங்கராசா, தம்பர் மாஸ்டர், கதிரவேலு, சீனிவாசகம், அம்பிகைபாகன் இவர்களை ஒரு அறிஞர் வட்டமாக இயக்கி, பல துறைகளிலும் முற்போக்கு கொள்கைகளை பரப்பினுர்கள். அதனுல் சிறுவயதிலேயே அம்பிகைபாகனுக்கு, இலட்சிய பெரியோர்களுடைய அன்பையும் ஆதரவையும் ஆசிகளையும் பெறும்பாக்கியம் கிடைத்தது. அதன்பின் தென்னிந்திய தமிழ் அறிஞர்கள் பலருடன் தொடர்புகொள்ளும் வாய்ப்புகளும் கிடைத்தன. அதனுல் அவருடைய அறிவும் வளர்ந்தது. யோகசுவாமிகள், செல்லாச்சி அம்மா போன்ற அருளாளர்களின் தரிசனமும் கிடைத்தது எனவே இவருடைய வாழ்க்கை ஒரு லட்சிய வாழ்க்கையானது ஆச்சரியமல்ல.

பல வழிகளிலும் இவர் பாக்கியவான் பிறந்த வீட்டிலும், புகுந்த வீட்டிலும், இவருக்கு செல்வமும் செல்வாக்கும் இருந்தது இவற்றை நல்வழியில் பயன்படுத்தினுர். பட்டதாரியானவுடன், சுவாமி விபுலானந்த அடிகளின் அன்பையும், மதிப்பையும் பெற்ற இவருக்கு மட்டக்களப்பு சிவாநந்த வித்தியாலயத்தில் ஆசிரிய பதவி கிடைத்தது. பின் வைத்தீஸ்வர வித்தியாலயத்திற்கு அதிபராக நியமிக்கப்பட்டார். மிகசிறு வயதிலே அதிபரான இவர் எப்படி ஒரு பெரிய கல்லூரியை நிருவகிக்கப்போகிருர் என்று சிலர் ஐயப்பட்டார்கள் இவருடைய இனியபேச்சும் புன்முறுவல் தவழும் முகமும் ஆசிரியர்களுடனும். மாணவர்களுடனும் கண்டிப்பாய் நடந்து கொள்வதற்கு தடையாய் இருக்குமென்று எண்ணினுர்கள். ஆனல் மாருக இவையும் இவருடைய உள்ளத் தூய்மையும், அன்பும். கடமை உணர்ச்சியும், மனிதாபிமானமும் எல்லாவற்றுக்கும் மேலாக இவருடைய தீவிரமான தெய்வபக்தியும். எல்லா இடையூறுகளையும் வென்றன. ஆசிரியர்கள் சீனிவாசகம், வயிரமுத்து, கார்த்திகேசு, பொன்முத்துக்குமாரு அவர்கள் இவருக்கு உறுதுணையாக இருந்து வித்தியாலயத்தை பலதுறைகளிலும் ஒரு பெரிய கல்விக்கூடமாக்கினுர்கள். வைதீக ஆசாரங்களில் தவருதவராயினும், ஜாதி, மதமென்றும் பிரிவுசெய்யும் கொடுமைகளை வன்மையாகக் சண்டித்தார். வாலிப மகாநாட்டின் முற்போக்கு கொள்கைகளை ஆதரித்து, அவற்றைப் பரப்புவதற்கு சிறிதும் அஞ்சாபலும் அசையாமலும் அவர் உழைத்தார் இக் கொள்கைகளில் இருந்து ஒருபொழுதும் பிறழவில்லை.

இராமகிருஷ்ண பரமஹம்சரின் போதனையைச் சாதனையாக வாழ்ந்துகாட்டிய பெரியார் தமது சமயத் தொண்டிலும் சமூகத் தொண்டிலும் சமயத்தவரையும் இனத்தவரையும் மதித்து, அவர்களின் மதிப்புப் பெற்ற பரந்த அடிப்படையில் குறிப்பாக காந்திய இலட்சியங்களுக்கமைய பல தரப்பட்ட சமுதாய இயக்கங்களில் அயராது உழைத்தார்.

இவ்வண்ணம் நாட்டுக்கும் சமூகத்தவருக்கும் உழைத்து பயனுள்ள வாழ்க்கையை வாழ்ந்து மறைந்த நண்பன் அம்பிகைபாகனுடைய ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசாபிமானி, சீர்திருத்தவாதி, பேராசான்!

பேராசிரியர் கு. நேசையா

வெறும் கட்டிடங்கள் பாடசாலையாகிவிட மாட்டா, திறமையான பரீட்சை முடிவுகள், அன்றில் ஒருசில மாணவரின் கிரிக்கெட் ஸ்கோர் விபரங்களும் பாடசாலையைக் கட்டி எழுப்பிவிடமாட்டாது. ஒரு பாடசாலையானது அடிப்படையில், இளைஞர்களையும், அவர்களின் குருவையும் கொண்ட ஒரு சமுதாயமாகும். அத்துடன், வெளிசமுதாயத்துடன் இருவழித் தொடர்புகளைப் பேணும் ஒரு சமுதாயமுமாகும். மேலும், கல்வியில் நன்குத் தேர்ச்சியுடையவர்களாக மட்டுமன்றி, பாடசாலைக்கும் அதன் வெளி சமுதாயத்துக்கும் சிறந்த தலைமையை அளிக்கக்கூடிய ஆசிரியர்களை தன்னகத்தே வைத்திருப்பது ஒரு சிறந்த பாடசாலையின் இன்னொரு சிறப்பம்சமாகும். வளரும் இளைஞர்கள் இயல்பாகவே, தமது வளர்ச்சிக்கு உதாரணமாக பின்பற்றக்கூடியவர்களையும், தாங்கள் காண விழையும் எதிர்கால சமுதாயத்தை தங்களுக்கு வழிகாட்டக்கூடியவர்களையுமே தமது ஆசிரியர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றனர்.


வைத்தீஸ்வரா வித்தியாலயம் இந்நூற்றுண்டின் நடுப்பகுதியளவில் மேற்கூறிய தகைமைகளையுடைய ஒரு சிறந்த அதிபரை திரு அம்பிகைபாகனை பெற்றிருந்தமை பெரும் பாக்கியமாகும். அத்துடன் மிகுந்த கடமையுணர்வுடைய உப அதிபர் திரு. வைரமுத்துவையும் சிரேஷ்ட உதவியாளர் திரு. சீனிவாசத்தையும் அதிபருடன் நெருங்கிய தொடர்புள்ளவர்களாக அடைய வித்தியாலயம்பெரும் பாக்கியம் செய்திருக்க வேண்டும்மூவருடனும் பல துறைகளில் ஒன்று சேர்ந்து உழைத்திருக்கும் வாய்ப்புக் கிடைத்தது நான் செய்த பாக்கியமே!

இங்கு நான். திரு. ச அம்பிகைபாகனுடன் ஒன்று சேர்ந்து பணியாற்றிய ஆறு சந்தர்ப்பங்களை நினைவிற் கொள்ள விரும்புகிறேன். மிகவும் பிரசித்திபெற்ற 1931ம் ஆண்டின் கமலாதேவி சஷ்டோபாத்யாய அவர்கள் தலைமை தாங்கிய இளைஞர் காங்கிரஸ் அமர்வு, முதலாவது சம்பவமாகும். அப்போது நான் இளைஞர் காங்கிரஸின் நிர்வாக சபையினதும், வரவேற்புக் குழுவினதும் தலைவராக இருந்தேன். இரண்டாவது சம்பவத்தில், ஆசிரியர் இயக்கமொன்றைக் கட்டியெழுப்புவதிலும் பொதுவாக கல்வி சம்பந்தமான விடயங்களிலும் இருவரும்ஒன்றிணைந்து பணிபுரிந்தோம். 40-ம் தொடர் ஆண்டுகளில் கலாநிலையமும். அதன் புத்தகத் தொகுப்புகளும், கலாசாரத்துறை சம்பந்தமாக அது நடத்திய கருத்தரங்குகளும் நானும் அவரும் ஒன்றிணைந்த 3வது சந்தர்ப்பமாகும். பல்லாண்டு காலமாக அம்பிகைபாகன் யாழ். பொது நூலகக் குழுவிலும் அங்கம் வகித்தார்

எங்களுக்கிடையே யான தொடர்கள் இதற்கெல்லாம் முன்னரே ஆரம்பித்துஇன்னும் தொடருகின்றதாயினும் இருவரும் ஒன்று சேர்ந்து பணி புரிந்த 5வது சம்பமாக இன்னொரு சம்பவத்தைக் குறிப்பிட விரும்புறேன். 1949ம் ஆண்டு மே மாதம் கோயம்புத்தூரிலுள்ள பெரிய நாயக்கன் பாளையத்தில், ஸாகிர் ஹூசேய்ன் தலைமையில் நடந்த அகில இந்திய அடிப்படைக் கல்வி மாநாட்டில் இருவரும் ஒன்ருகக் கலந்துகொண்டதே அச்சம்பவம். இறுதிச் சந்தர்ப்பமாக அவர். சுவாமி விபுலானந்தரின் கட்டுரைபற்றி என்னிடம் விளக்கிக் கூறியிருந்ததை நினைவிற்கொள்கிறேன் சுவாமி விபுலானந்தர் இக்க ஆக்கங்களில் சிறந்த தத்துவவாதிகள், கல்விமான்கள். விஞ்ஞானிகளை உருவாக்கக் கூடிய ஒரு பல்கலைக்கழகமொன்று யாழ்ப்பாணத்தில் அமைவதை எதிர்பார்த்தார். இத்தகவலை பின்னர் நான். 'யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைப்பதற்கான வேண்டுகோள்' எனும் தலைப்பில் 'ஸ்கந்தா' சஞ்சிகையின் 75வது இதழில் எழுதுகையில் பயன்படுத்தினேன் பின்னர் அம்பிகைபாகன், சுவாமி விபுலானந்தர் 'பல்கலைக் கழகக் கல்வி' பற்றி எழுதிய கட்டுரையைக் குறிப்பிட்டு தான் இத்தலைப்பில் எழுதிய அறிவு சார்ந்த அறிக்கையின் நகல் ஒன்றை என்னிடம் தந்தார்.

காலாகாலமாகஇலங்கையே பாரத நாகரீகத்தின் நெருங்கிய இருப்பிடமாக இருந்து வந்திருக்கிறது இன்றைய காலகட்டத்தில் வடக்கு. கிழக்குத் தமிழ் பகுதிகளே இந்தியாவின் அரசில், ஆன்மீக மறுமலர்ச்சிக்கு சிறப்பான முறையில் செவிசாய்த்துள்ளன. 19ம் நூற்றுண்டின் இறுதியில் சுவாமி விவேகானந்தர், ஸ்ரீஇராமகிருஷ்ணரின் ஆன்மீகச் செய்தியை இங்குக் கொண்டு வந்தார். அந்த வித்து இங்குள்ள இந்துத் தமிழர்களிடையே பயனுள்ள விதத்தில் முளைவிட்டு அத்துடன் எங்கள் காலத்தில். ஆர்னல்ட் டோன்பீ அவர்கள், காந்தி நேரு யுகத்தை, புத்தர்-அசோகன் யுகத்துடன் ஒப்பிட்டுக் கூறிய செய்தியை மகாத்மா காந்தி தனிப்பட்ட முறையில் தந்தபோது அதற்கான ஆர்வம் வடக்கிலேயே குறிப்பாக அப்போது இளைஞர்களாகவிருந்த எம்மிடையேயே அதிகமாக இருந்தது.

அம்பிகைபாகன், ஸ்ரீராமகிருஷ்ணரின் ஆன்மீகச் செய்தியாலும், மகாத்மா காந்தியின் ஆன்மீக - சமுதாய சிந்தனைகளாலும் மிகவும் கவரப்பட்டிருந்தார் என்றே நான் நினைக்கிறேன். இந்த இரு ஊற்றுகளுமே பின்னர் அவர் இத்துறைகளில் சிறந்து விளங்கி ஒரு தேசாபிமானியாக, சீர்திருத்தவாதியாக, பேராசானுகத் திகழச்செய்தது.



அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் தெ. பொ. மீனட்சிசுந்தரனர் அவர்கள் அமரர் அம்பிகைபாகன் அவர்களுக்கு இலங்கைக் கம்பன் கழகத்தின் சார்பில் பதக்கம் அணிவித்துக் கௌரவிக்கின்றார்

# அறிஞர் அம்பிகைபாகனின் பல்துறைப் பணிகள்

ஸி. வைரமுத்து

முன்னுள் உபஅதிபர், வண்ணை வைத்தீஸ்வராக் கல்லூரி

யாழ்ப்பாணத்தில் 1925-ம் ஆண்டு வரையில் பல துறைகளில் விசேஷமாகக் கல்வி, சமயம், சமூகமானவற்றில்ஒரு எழுச்சியும்கிளர்ச்சியும் மிளிர்ந்தன. சைவ வித்தியா விருத்திச் சங்கம் தீவிரமாகச் செயற்படத் தொடங்கியதன் பயனுகப் பல சமூக மாற்றங்கள் ஏற்பட ஏதுவாயிருந்தன. திருக்கேதீஸ்வர புனருத்தாரண கைங்கரியங்களும் தொடக்கப்பட்டு மக்களின் ஆர்வம் தூண்டப்பபட்டது. மேலும் 1925-ம் ஆண்டின் சித்திரை மாதத்திலேயே அகில இலங்கை மாணவர் மகாநாடு அங்குரார்ப்பணம்செய்யப்பட்டது. இதன் பின் இலங்கை வாலிபர் மகாநாடு என்னும்பெயரில் இயங்கி பல சமூக மாற்றங்களைத் தொடக்கிவைத்ததுடன் அரசியலிலும் 1931-ம் ஆண்டில் சட்டசபைத் தேர்தற் பகிஷ்கரிப்புக்கும் ஏதுவாயிருந்தது. வண்ணர்பண்ணையும் அங்கு செயற்பட்ட தீவிரமான அறிஞர்கள் பலருமே இப்படியான மாற்றங்களுக்கு மையமாக இருந்தனர் இவர்களுள் வழக்கறிஞர்கள் M S. இளையதம்பி, T. N. சுப்பையா, C மயில்வாசனம், கலைப்புலவர் K. நவரெத்தினம் ஸ் ஹண்டி பேரின்பநாயகம் முதலியோர் இடம்பெற்றனர் முற்போக்குவாதிர்களான இவர்கள் யோகர் சுவாமி அவர்களின் நற்போதனைகளையும் பெற்றிருந்தார்கள்.

அமரர் அம்பிகைபாகன் யாழ். இந்துச் கல்லூரியில் மாணவனய் திரு. C. மயில்வாகனத்தின் மேற்பார்வையில் இயங்கிய காலத்தில் இந்தச் சூழ்நிலையில் இவ்வறிஞர்களுடன் பழகி முற்போக்கியக்கங்களில் ஒன்றியவரானதுடன் யோகர் சுவாமியுடைய ஆசிக்கும் பாத்திரமானுர். எனவே, அவர் சுன்னுகத்தைப் பிறப்பிடமாய்க் கொண்டிருந்த போதும் அவரின் மனப்போக்கு, வாழ்க்கை இலட்சியங்கள் யாவும் வண்ணர் பண்ணையிலேதான் உருவாக்கப்பட்டதென்றே கூறலாம். இன்னும் இவர் பட்டப்படிப்புக்காகச் சென்னையில் வாழ்ந்த காலத்தில் இந்திய சுதந்திர இயக்கத்தில் நெருங்கிய அனுதாபம் கொண்டவராயும், அவ்வியக்கத்தில தீவிர பங்கு கொண்டவர்களான திரு. பெரியசாமி தூரன், கல்கி கிருஷ்ணமூர்த்திபிற்காலத்தில் மத்திய அரசின் மந்திரியாயிருந்த C. சுப்பிரமணியம் முதலியோரின் நட்பைப் பெற்றிருந்தார். மேலும் அக்காலத்தில் சென்னை இராமகிருஷ்ணமடத்திலும் நெருங்கிய தொடர்பு கொண்டு ஸ்ரீராமகிருஷ்ணர், விவேகானந்தர் அவர்களின் போதனைகளில் ஊறித் திளைத்தவராய் இருந்தார். பட்டப்படிப்பு முடிந்ததும் தாயகம் திரும்பியபின் முன்பு ஒருமித்திருந்த முற்போக்குக் குழுவினரில் ஒருவராய்ப் பல முன்னேற்றத் திட்டங்களில் சேர்ந்து செயற்படத் தொடங்கினுர். இவருக்குப் புத்தகம் வாசிப்பதிலிருந்த அபூர்வ ஆர்வம் திரு. நவரத்தினத்துடன் நெருங்கிய உறவை ஏற்படுத்தியது. இதனுல் என்னுடனும், திரு. சீனிவாசகத்துடனும் நெருங்கிய நட்புறவு பூண்டிருந்தார். அக்காலத்தில் அவரது பெற்றோர், சகோதரங்களுடனும் பழகினேம். மேலும், நாமிருவரும் அவரின் மற்றைய நண்பர்கள், முக்கியமாக K. நவரத்தினம், பிற்கால மத்திய கல்லூரி அதிபர் A. E. தம்பர், பத்திரிகையாளர் M. கதிரவேலு ஆகியோரும் பலமுறை அவர்களின் சுன்னுகம் சப்பல் வளவு இல்லத்தில் விருந்தினராய் களிப்புற்றிருக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்திருக்கிறேம்.

இவர் பட்டப்படிப்பு முடித்துத் திரும்பிய காலம் பட்டதாரி ஆசிரிய நியமனம் பெறுவது மிகவும் கஷ்டம். பட்டதாரி வேலையில்லாத்திண்டாட்டம் தாண்டவமாடிய காலம்.

இந்நிலையில் கல்லடி உப்போடையில் மட்டக்களப்பு சைவ மாணவர்களுக்காக சிவானந்த வித்தியாலயத்தை ஆரம்பித்துவைத்திருந்தார் சுவாமி விபுலானந்த அடிகளார் அப்பாடசாலையைக் கொண்டு நடத்த தமக்கு நல்ல உதவியாக ஆசிரியர் தேவைப்பட்டிருந்தார். அவர் யாழ்ப்பாணம் வந்தபோது அம்பிகைபாகனைக் கண்டு தமக்கு உதவியாய் வரும்படி அழைத்தார். அது ஒரு கஷ்டமான பிரதேசமாகையால் ஓரளவு தயக்கத்துடன் சுவாமிகளுடன் சேவை புரியும் வாய்ப்பொன்றை மனதிற்கொண்டு அவ்வழைப்பை ஏற்று [illegible] சென்றார்.

பின்பு சுவாமி 1935ம் ஆண்டு ஐப்பசி மாதம் திரு. அம்பிகைபாகனை அதிபராக இங்கு அனுப்பினுர். எனவே நாங்கள் நண்பர் மூவரும் ஒரே பாடசாலையில் பணிபுரியும் வாய்ப்பைப் பெற்றேம்.

இவர் அதிபராய்க் கடமை ஏற்கும்போது 125 மாணவர்களும், 7 ஆசிரியர்களும் கொண்ட ஒரு சிறிய மூன்ருந்தரப் பாடசலையாகவே இருந்தது. எனினும், இவரின் அயராஉழைப்பினுலும், ஆசிரியர் யாவரின் ஒத்துழைப்பினுலும் படிப்படியாகப் பாடசாலை வளர்ந்து ஈற்றில் முதலாந்தரப் பாடசாலையாக 1500க்கும் மேற்பட்ட மாணவர்களுடனும், 51 ஆசிரியர்களுடனும் முன்னேறியது அதுவுமல்லாமல் ஓர் பாரிய மண்டபமும், வகுப்பறைகளும், வாசிகசாலைகளும், ஆய்வுகூடங்களும் அமைத்து வேறு எந்த முதலாந்தரப் பாடசாலைக்கும் சமனுதாய் உயர்த்தியிருந்தார் இவரது 32 வருடகால அதிபர் சேவை ஒரு தனித்துவம் வாய்ந்தது எனக் கூறுவது மிகையாகாது. இவ்வளவு நீண்டகாலம் வேறொருவர் அதிபராக இருந்து பாடசாலையையும் உயர்த்தித் தானும் உயர்ந்த ஒரு சாதனையைக் காண்பது அரிதென்றே கூறலாம். இவர் காலத்தில் கல்வி உலகில் பல பிரச்னைகள் எழுந்தன தாய்மொழிமூலம் கல்வி, இலவசக்கல், ஆசிரிய விதவைகள் அநாதைகளுக்கான ஒய்வூதியம் வழங்கல் போன்றவற்றிற்கெல்லாம் ஆசிரிய சங்கங்களில் பொறுப்பான பதவிகளை வகித்து நல்ல முடிவுகளைப்பெறஅயராது உழைத்து வந்தார். இவரின் ஆற்றலை நன்குணர்ந்த வடமாகாண அதிபர் சங்கம் இவரைச் சங்கத்தின் தலைவராகஅடுத்துஇரு முறை தெரிவுசெய்து கௌரவித்ததென்ருல் இவரின் திறமைசகு வேறுசான்றுவேண்டுமோ?

இதேகாலத்தில் சமூகப்பிரச்னைகளிலும் பங்குகொள்ளத் தவறவில்லை. வாலிபர் மகாநாட்டினர் தொடக்கிவைத்த சமாசனம், சமபோசன இயக்களிலும் பங்கு எடுத்ததோடு தாழ்த்தப்பட்ட வர்க்கத்தினர் எனக் கூறப்படுபவர்கள் கோவில்களுக்குப் போய் வணங்க அனுமதிக்கப்படவேண்டுமென்ற இயக்கத்தில் தீவிர பங்குகெடுத்து வெற்றியும் கண்டார். இத்துடன் இலக்கியம், கலை கலாசார வளர்ச்சிக்காக நிறுவப்பட்ட கலாநிலையம். ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் முதலியனவற்றில் பெரும்பங்கு கொண்டு அயராது உழைத்தார். இவரின் இச்சேவைகள் உயரதிகாரிகளின் கவனத்துக்கு வந்து இவர் சர்வகலாசாலை குழுக்களில் அங்கத்துவம் வழங்கப்பெற்ருர். இக்குழுக்களில் இவர் புரிந்த அருமசேவை யாவரும் அறிந்ததே. யாழ்ப்பாணத்தில் சர்வகலாசாலை நிறுவுவதற்கான இயக்கத்தில் அயராது உழைத்தார். ஈற்றில் சர்வகலாசாலை அமைக்கப்பட்டபின் அதன் உயர்குழுவில் அங்கத்துவம் வழங்கப்பட்டது. அப்பதவியில் அருஞ்சேவையும் புரிந்தார்.

மேலும் இலங்கை எழுத்தாளர் சங்கத்தாரால் பேணுமன்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னில் எனக்கினியன்

என்னிலும் எனக்கு இனியான் ஒருவன் உளன் என்பது பிரத்தியட்சமாக எனது வாழ்நாளில் கிடைத்த உத்தமன் ஸ்ரீமான் அம்பிகைபாகன் அவர்களே. கொக்குவில் கிழக்கில் ஸ்ரீ இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை ஆரம்பித்த நாளில் அப்பாடசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றினேன். மாணவர்கட்குத் தேவார திருவாசகங்களைப் பண்ணுடன் பாடப் பயிற்றினேன். பண்ணிசை பாடும் பிள்ளைகளை வைத்தீஸ்வர வித்தியாசாலைக்கு அழைத்துச் செல்வேன். பகிரங்கக் கூட்டங்களில் நானும் பிள்ளைகளைப் பாடச் செய்வதுடன் பஞ்சபுராணம் பாடுவேன். இது நடந்தது நாற்பத்தைந்து வருடங்களுக்கு முன்னே. அந்த நாட்களில் எனது பணியைச் சுவாமி விபுலானந்தா முதலான மகான்களுக்குச் சொல்லிச் சொல்லி என்னைப் பாராட்டிச் சிறப்பித்த பெரியார் உயர்திரு அம்பிகைபாகன் அவர்கள். அவர் அந்நாள் முதல் எனக்கும் இவரோடு ஆன்மநேய ஒருமைப்பாடு உளதாயிற்று. 'பிறைநிறை நீர நீரவர் கேண்மை' என்றாங்கு எம் இருவருக்கும் அன்புகலந்த நட்பு வளரலானது எனது புண்ணியப்பேறு என்றே கணித்துள்ளேன்.

எத்தனையோ புத்தகங்கள் எழுதி இருக்கின்றார். அவர் சொல்ல நான் எழுதுவேன்,

சைவப்புலவர்
**பண்டிதர் கா. நமசிவாயம்**

வசனங்களை எப்படி எழுதல் வேண்டும் என என்னுடன் ஆராய்வார். நான் இப்படி எழுதலாம் என்பேன். முகம் மலர்வார். அப்படியே எழுதுங்கள் என்பார்.

### புராணபடனம்

மல்லாகம் பழப்பதி விநாயகர் ஆலயத்தில் கந்தபுராண படனம் எத்தனையோ பல வருடங்களாக நடைபெற்று வருகிறது. 1950ஆம் ஆண்டுமுதல் அடியேன் வாசித்துப் பயன் சொல்லியும் தொண்டு புரிந்து வருகின்றேன். திரு. அ. சரவணமுத்து வித்தியாதரிசி, திரு. ச. அம்பிகைபாகன் அதிபர், திரு C M. வன்னியசேகரம் M S C., வைத்தியகலாநிதி தம்பதிகள் புராணங்கேட்ட சைவ அடியார்கள் ஆவர். கோயிற் குருக்கள் புத்தகபூசை செய்து ஆரம்பித்து வைப்பார்கள். சிவஸ்ரீ குக சர்மா ஐயர் அவர்கள் பிரதம உரை சொல்லும் குருவாக விளங்கி வருகின்றார். அடியேன் உரை சொல்ல அதிபர் வாசிப்பார்கள் எனது பயன் உரைகளை அவர்களது வாசிப்பே சிறக்கச் செய்தது. தெல்லிப்பழை அருள்மிகு துர்க்கை அம்பாள் ஆலயத்தில் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம் வைதிக சைவ ஆசாரசீலத்துடன் படனஞ் செய்து பக்தர்கள் சிரத்தையுடன் கேட்டு உய்தி பெறுகின்றனர். அந்தணர், சைவக்குருமார் சிவதீட்சை பெற்று அனுட்டானஞ் செய்யும் சைவர்கள் உரை சொல்ல நியமனம் பெற்று பயன் சொல்லுகின்றார்கள். வாசிப்பதற்கும் சைவ ஆசார ஒழுக்கஞ்சிறந்த பெருமக்கள் பலர் இருக்கிறார்கள். இத்திருக்கூட்டத்தில் அடியேனைச் சேர்ந்தவர் அதிபர்தான் அத்தலத்திலும் அவர்களே வாசித்து எனது உரை சிறக்க உபகரித்தார்கள். சைவ ஆலயங்கள் தோறும் கந்தபுராணம் விதிப்படி படிக்கப்பட வேண்டும் என்று ஆலய பரிபாலகர்களை ஊக்குவித்தார்கள். கந்தபுராணம் தமிழ் மரபு காக்கும் தமிழ்நாட்டுக் காப்பியம் எனும் ஆராய்ச்சி உரை எழுதி வெளிப்படுத்தி உள்ளார். பெரியபுராண விளக்கக் கட்டுரைகளும் எழுதியது எல்லோர்க்கும் தெரிந்ததே.

### கலைக்களஞ்சியம்

கல்வி மந்திரிப்பதவி வகுத்த பெரியார் அவிநாசிலிங்கம் செட்டியார் அவர்கள் கலைக்களஞ்சியங்களை வெளியிடச் செய்தார். அந்த முயற்சியில் அதிபரின் உதவியும் தேவைப்பட்டது. அதில் இலங்கையில் கலைவளர்த்த பெரியார்களின் வரலாறுகளை எழுதிக் கொடுத்தார்கள். கொடுத்தவை யாவும் கலைக்களஞ்சியத்தில் இடம் பெற்றுள்ளன. மகாவித்துவான் பிரம்மஸ்ரீ கணேசையர் தொல்காப்பியம் உரைவிளக்கம் எழுதிப் பதிப்பித்து, இரகுவம்சம் உரை எழுதியது என்றின்னோரன்ன தமிழ்ப் பணிகளை எல்லாம் விரிவாக எழுதி வித்துவானவர்களின் படத்துடன் பதிப்பித்துள்ளார். மகான் செந்திநாதையர் சைவ நூல்கள், தருக்க, நியாய உரைகள் எழுதிப் பதிப்பித்தார். விரிவுரைகள், மாணாக்கர்கட்கு பாடஞ் சொல்லி இலவசமாகக் கற்பித்தல் ஆகிய அவர்களது சைவத் திருப்பணிகளை அனைத்தும் தொகுத்தார்கள். கலைக்களஞ்சியத்தில் மகானின் படத்துடன் வெளிவரச்செய்த பெருமை திருவாளர் அம்பிகைபாகன் அவர்களுக்கே உரியது.

### செயலாளர்

1935ம் ஆண்டு அகில இலங்கைச் சைவ மகாநாடும் 1951ஆம் ஆண்டு நடந்த தமிழ் மகாநாடும் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றன. இவர்கள் காரியதரிசியாக ஆளுமையுடன் பணிபுரிந்தார். இந்தியாவில் இருந்து இங்குவரும் பெரியார்களை வரவேற்கவும் தங்குவதற்குரிய இடங்களை நிச்சயித்து உணவு வசதிகளை ஏற்படுத்தவும் இவர்கள் செய்த செயல்களை ஏனையோர்களால் முடியாது. கலைப்புலவர் நவரத்தினம் அவர்கள் பக்கத்துணையாக இவருடன் சேர்ந்து மகாநாடுகளிற் கடமையாற்றினர்.

1952ஆம் ஆண்டு சென்னை மாநகரில் உலகத் தமிழ் மகாநாடு நடைபெற்றது. கௌரவ சு. நடேசபிள்ளை அவர்கள், திரு. அ. சரவணமுத்து வித்தியாதரிசி, அருள்நந்தி வடபெரும்பகுதி வித்தியாதிகாரி, பத்திராதிபர் இராசா அரியரத்தினம் அவர்கள். அதிபர் அம்பிகைபாகன் எனும் இவர்களோடு தமியேனும் விமான மூலம் சென்று திருச்சியில் இறங்கினோம். வரவேற்போபிரமாதம். அழைத்துச்சென்ற விதமோ சொல்லுந்தரமன்று. தங்கவைத்த இடம் பணியாட்களை ஏற்படுத்தி விருந்தினராய்ச் சென்ற வெளிநாட்டன்பர்களாகிய எங்களுக்கு இந்திய மேதாவிகள் புரிந்த மரியாதை உபசரிப்புக்கள் எவ்வளவு சொன்னாலும் எழுதினாலும் எழுத்தில் அடக்கல் அரிதுஅரிது இந்தியமேதைகள் இந்திய ஜனாதிபதியாக இருந்த இராசகோபாலாச்சாரியார், கல்கி ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி, சோமு பெரியசாமி தூரன் என்போர்எமதன்பரை அதிபர் அவர்களை பெருமதிப்புடன் கண்ணியமாக நடத்திய மதிப்புகளை யான் உடனிருந்து கண்டேன். தென்தமிழ்நாட்டு மகாமேதைகள் இவரை மதித்தனர். இவர்களும் அடக்கம், சாந்தம், பணிவுகளோடு அவர்களோடு பழகினர். அவர்களது ஆசிவாழ்த்துக்களையும் அடைந்தார். இன்னும் முற்றத் துறந்த முனிவர்களைத் தேடியடைந்து பணிவுடன் உள்ளத்தாலும் உடலாலும் வழிபட்டு அவர்களின் ஆசிகள் பலவும் பெற்றார். யோகசுவாமிகளின் அன்பும் ஆசியும் நிறையப் பெற்றார். இவைகளின் பேறாக இவர்களின் பிள்ளைகள் சகல சீர் சிறப்பும் மிகுந்து உலகப் பெருநகரங்களில் பெரிய பதவிகளில் சுகமும் நலனும் நிறைந்திருக்கிறார்கள்.

### குணதிசயங்கள்

சிவபக்தி அடியார்பக்தி மிகுந்தவர். துறவிகள் அறிவாளர் ஞானியர்களைத் திரிகரணசுத்தியுடன் பேணுபவர். சாதிசமயச் சழக்குகளைக் கடந்தவர். வீண்வார்த்தைபேசாதவர். தமிழர்களின் பாரம்பரிய உடைகளையே அணிந்தவர் பொய், குறளை, கடுஞ்சொல், பயனில்சொல் பேச அறியாதவர். மனத்தொடுவாய்மை மொழிபவர் இன்முகம், இன்சொல் எப்போதும் உடையவர். நன்றிமறவாதவர். தன்னோடு பழகிய அன்பர்க்கு வேண்டும் நன்றிபுரிபவர் சிற்றினஞ்சேராதவர். அருங்கலை விநோதர். தெய்வம் இகழார். தக்கார் இனத்தனாய் வாழ்ந்தவர். அன்பு, நாண், ஒப்புரவு கண்ணோட்டம், வாய்மை ஐந்தும் குடிகொண்ட சான்றோர் குணமென்னும் குன்றேறி நின்றவர். நன்றியில் செல்வம் நாடாதவர். சேராத இடந் தன்னிற் சேராதவர். புறங்கூறுமை என்னும் பொற்புடையவர். விரிக்கிற் பெருகும் ஆதலின் அமையும்.

## கி. வா. ஜ.

[5ம் பக்கத் தொடர்ச்சி]

முகம் புதிதாக இருக்கும்; ஆயினும் இலங்கைத் தமிழர்கள் இவர்கள் எழுத்தோவியங்களை நன்கு சுவைத்திருப்பார்கள்.

இவர்களுக்கு வேண்டிய நலன்களைச் செய்து உதவ வேண்டுகிறேன். தங்கள் கல்லூரியில் இவர்களைப் பேசச்சொல்லலாம்.

அன்பன்,
கி.வா.ஜகந்நாதன்

## அறிஞர்

[7ம் பக்கத் தொடர்ச்சி]

னன் எனும் பாராட்டையும் பெற்றிருந்தார். பாடசாலை சேவை, பல்வேறு சமய சமுதாய சேவைகள் மத்தியிலும் தனது குடும்பப்பொறுப்பிலும் மிகவும் அக்கறைகொண்டவராயிருந்தார் 1941ம் ஆண்டு கார்த்திகையில் மணமாகிய பின் மல்லாகம் மணிமனை எனும் இல்லத்தில் ஓர் இலட்சிய குடும்பஸ்தனாய் வாழ்க்கை நடத்திய ஒரு பெருமகனாய் திகழ்ந்தார். அவரது நற்தவத்தின் விளைவாக அவரது குழந்தைகள் ஐவரும் உயர் பதவிகளில் அமர்ந்தவர்களாய் நல்வாழ்வு வாழ்கிறார்கள்.

இளைப்பாறிய பின்னர் அவரது இல்லத்தில் திரு சீனிவாசகமும் நானும் இடையிடையே சந்தித்து ஒருங்கு கூடி விருந்துண்டு காலங்கழிப்பது வழக்கமாயிருந்தது. அப்படியான வேளைகளில் வேறு பிற நண்பர்களிடமோ இனத்தவர்களிடமோ ''நாங்கள் மூவரும் முப்பத்திரண்டு வருடங்களாக ஒன்றாய் கடமை புரிந்த நண்பர்கள்'' என்று சொல்வதில் பெருமகிழ்ச்சி அடைவார்.

இளைப்பாறியபின் கோயில் வழிபாடு, புராண படனம் முதலிய சமய அனுஷ்டானங்களிலும் பெருமளவு நேரத்தை செலவிட்டுவந்தார் இன்னும் சிவதொண்டன்நிலையத்தில் நிகழும் மாதாந்த யாகங்களிலும் விசேஷ வைபவங்களிலும் தவறாதுகலந்துகொள்ளுவார். இற்றைக்கு இரண்டுவருடங்களுக்கு முன் அவரின் உடல்நலம் குன்றியபின்னரே சிவதொண்டன் வருவதைக் குறைத்துக்கொண்டார் மேலும் போக்குவரத்துக்கஷ்டங்களாலும், பல்வேறு வசதியீனங்கள் காரணமாகவும் நாங்கள் மூவரும் முன்போல் அடிக்கடி, சந்திப்பதும் குறைந்தன. சென்ற மாதம் 26ம் திகதி நோய்வாய்பட்டிருக்கிறார் என்று அறிவிக்கப்பட்டதும் நானும் நண்பர் சீனிவாசகமும் விரைந்துசென்றபோதிலும் இவ்வுலக உணர்வு இழந்த நிலையிலேயே அவரைக் காணக்கூடியதாக இருந்ததால் மனம் தளர்ந்தோம். எனினும் முருகப் பெருமானுக்கு உவந்த தைப்பூசத் திருநாளிலேயே முருகப் பெருமானின் அழைப்பை ஏற்று அமரத்துவம் அடைந்தார் என்பதில் அவருடைய குடும்பத்தினர், நண்பர்கள், அபிமானிகள் யாவரும் பெருமைகொள்ளலாம். நிறைவாழ்வு வாழ்ந்த பெருமகனின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

# கல்லூரிக்கு வாய்த்த அதிபர்

பாண்டி நாட்டில் சைவ சமயம் குன்றிச் சமண சமயம் தழைத்தோங்கிய அந்நாளில், பாண்டிமாதேவியும் குலச்சிறையாரும் மனம் வருந்திச் சோமசுந்தரக் கடவுளை மனம் நெக்கு நெக்குருக வணங்கிக் கொண்டிருக்கும் அந்நேரத்தில் அவர் முன், சீர்காழியில் உள்ளவரும், உருத்திராட்சம் தரித்தவருமான பிராமணர் ஒருவர் கடவுளை வழிபடும் பொருட்டு அங்கு சென்றிருந்தார். அவரிடம் சீர்காழியிலுள்ள விசேஷங்களைப்பற்றி அவர்கள் வினவுகையல், அவர் அவர்களுக்குத் திருஞானசம்பந்தர் என்றொருவர் சிவபாதவிருதயருக்கு மகனாகத் தோன்றியுள்ளார் என்றும், மூன்று வயதிலேயே ஞானப்பால் ஊட்டப்பெற்றுத் தேவாரங்கள் அருளிச் செய்துள்ளார்கள் என்றும் கூறி, அவருடைய பெருமையைப்பற்றி இன்னும் கூறினர். சமயம் பரப்புமுகமாக நாடுகடோறும் சென்றுகொண்டிருக்கையில் பாண்டி நாட்டுக்கு இறைவனுடைய தூண்டுதலால் செல்வாரென்றும், அப்படிப் பாண்டி நாட்டுக்கு அவர் செல்லும் பாக்கியம் அவர்களுக்குக் கிடைக்கப்பெற்றால் அவர்களுடைய இடரும் தீர்த்தருளுவார் எனவும் அப்பிராமணர் வாக்குறுதியளித்தார். இந்நற்செய்தியைக் கேட்ட அந்தக்ஷணமே பாண்டிமாதேவி அவரிடம் ஒரு ஓலை எழுதிச் சம்பந்தருக்கு அனுப்பவே, அவ்வோலையை எடுத்துச் சென்று அப்பிராமணரும் அவரை அழைக்கவே, ஞானசம்பந்தரும் தம்முடைய அச்சிறு பிராயத்திலேயே தாம் பெற்ற மெய்ஞ்ஞான அருளினால் அவர்கள் இடர் களைந்து அவர்களை இன்பக் கடலில் ஆழ்த்தினர் இதற்குக் காரணகர்த்தா அப்பிராமணர் ஆவார்.

அதேபோன்று, இற்றைக்கு முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு சிறு ஓலைக் கொட்டில் வடிவத்தில் மிகக் குறைந்த எண்ணிக்கையுடைய மாணவர்களுக்குக் கல்விப் பணி புரிந்த எங்கள் வைத்தீஸ்வர வித்தியாலயம், இன்று போற்றத்தக்க இந்நிலையில் இருப்பதற்கு ஏற்ற முறையில் இதனைக் கொண்டு நடத்தக்கூடிய ஒருவர், அறிவு, ஒழுக்கம், சமயப் பற்று, கடவுளிடத்து நீங்காத அன்பு, இளமை, வெள்ளை உள்ளம் முதலிய நற்பண்புகளைத் தம்மகத்தே கொண்டவர் திரு அம்பிகைபாகன் அவர்கள் தான் என்பதை முன்னறிந்தவராகியவரும் இராமகிருஷ்ண மிஷனைச் சார்ந்தவருமாகிய சுவாமி விபுலானந்த அடிகள் அவருடைய இளம் பிராயத்திலேயே, அதாவது வயது முப்பதையே எட்டிப்பாராத அப்பருவத்திலேயே. அவரை இங்கு அதிபராக அனுப்பிவைத்தார்.

திருமதி P. கந்தசாமி B.A

திருஞானசம்பந்தர் தம்முடைய அச்சிறு பிராயத்தில் ஞான அறிவினால் சிவபெருமானிடம் முத்துச் சிவிகை, முத்துப் பல்லக்கு முத்துப் பந்தர், படிக்காசுகள் முதலியவற்றைப் பெற்றுப் பாலைநிலத்தை நெய்தல் நிலமாக்கியது போன்று, அதிபருக்குரிய அனுபவம் போதாத அத்தகைய இளம் பிராயத்தில் சுவாமி அவர்களின் வேண்டுகோளை மறுக்காது தம் கடமையைச் செவ்வனே நடாத்தும்பொருட்டுத் தமக்குப் பக்கபலமாக எங்கள் இளைப்பாறிய உப அதிபர் திரு. வைரமுத்து அவர்களை வலப்பாகத்திலும், திரு சீனிவாசகம் அவர்களை இடப்பாகத்திலும் கொண்டு அவர்களுடைய தீவிர ஒத்துழைப்பினாலும், தம்முடைய கள்ளங்கபடமற்ற தூயசிந்தையினாலும் தாம் மேற்கொண்ட பணியைச் செவ்வனே நடாத்தி வித்தியாலயத்தைப் படிப்படியாக நாளடைவில் முன்னேறச்செய்து, ஓர் உயர்தர மகாவித்தியாலயமாக்கிய பெருமை பாராட்டத்தக்கதேயாகும்.

''ஆல்போல் தழைத்து அறுகுபோல் வேரூன்றி'' என்பதையொப்ப, ஆலமரமான கிளைகளைப் பரப்பி, பருத்து வளர்ந்து தன்னகத்தே பறவைகளை வா வா என்றழைத்துக் கனி கொடுத்து நிழல்கொடுத்து உதவுவது போன்று வண்ணார் பண்ணையில் திகழும் இவ்வித்தியாலயமும் அறுபது ஆண்டுகளாக இன்றுவரையும் கல்விப் பணி புரிவதில் ஒப்பற்று விளங்குவதோடு அகதிகளுக்குப் புகலிடமாகவும், சமயத் தொண்டாற்றுவோருக்கு உகந்த தொண்டர் நிலையமாகவும், மற்றும் பல சமூகப்பிரசாரங்கள் செய்பவர்களுக்குச் சிறந்த மண்டபமாகவும் தற்போது திகழும் பெருமை, இப்போது இளைப்பாறும் அதிபர் திரு அம்பிகைபாகன் அவர்களுக்கே உரித்தாகும் என்றால் மிகையாகாது.

ஆலமரமானது தன்னைக் கடும் புயல், காற்று, மழை முதலியவற்றினின்றும் காப்பாற்றும் பொருட்டுத் தன்னுடைய மூலவேரினைவிடக் கிளைகளிலும் மற்றும் பகுதிகளிலுமிருந்து தாங்கும் வேர்களைத் தோற்றுவித்துக் கீழ்முகமாக மண்ணினுள் ஆழச்செய்து வலும்பெற்றுத் தன்னைப் பல்லாண்டு காலம் நிலைபெறச் செய்வதுபோன்று, எங்கள் அதிபர் உட்பட இவ்வித்தியாலயத்தை ஆக்கிய மும்மூர்த்திகளும் ஒரேகாலத்தில் மிகஅண்மையில் இளைப்பாறியபோதிலும் அவர்களுக்குப் பின்னால் அவர்கள் தோற்றுவித்த இங்கு உள்ள திறமை வாய்ந்த ஏனைய ஆசிரியர்களால் இவ்வித்தியாலயமானது மேலும் மேலும் தழைத்தோங்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

[சேவைநலம் பாராட்டு மலரிலிருந்து]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கைத்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இறுதியில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமொன்றில். "இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் வன்முறைகளையிட்டும், அங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்களையிட்டும் எமது மாநாடு ஆழ்ந்த கவலை கொள்கிறது. இந்திய மத்திய அரசு தனது சிரத்தையற்ற போக்கைக் கைவிட்டு இந்தத் தமிழர்களுக்கு நீதி கிடைப்பதற்கு வேண்டிய சகல முயற்சிகளையும் எடுக்கவேண்டுமென இந்த மாநாடு வலியுறுத்துகிறது" என்று கூறப்பட்டுள்ளது.

இம் மாநாட்டில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்களில் கர்னாடக முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே, பஞ்சாப் முதலமைச்சர் திரு சுர்ஜீத்சிங் பர்னாலா ஆகியோரும் அடங்குவர், [செ]

## 31-ம் நாள் நினைவஞ்சலி

### அமரர் சின்னத்தம்பி இளையதம்பி

[மலாயன் பென்சனர் சுழிபுரம்]



தோற்றம்: 1906-03-07
மறைவு: 1986-01-17

அன்புடனும் பாசத்துடனும் வாழ்ந்து எம்மை எல்லாம் ஆருத்துயரில் ஆழ்த்திவிட்டு திடீரென அணைந்து விட்ட எங்கள் அன்புத் தெய்வத்தின் ஈமக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும். எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன், 15 - 2 - 86 சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்

உங்கள் பிரிவால் வாடும்:

மனைவி, மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சுழிபுரம் வடக்கு,
சுழிபுரம். C 779


**எம்பயர் திரையில்**
10-30, 2-30, 6-30, 9-15
விஜயகாந்த் - கவுண்டமணி
நானே ராஜா
நானே மந்திரி

**லிடோ சினிமா**
10-30, 2-30, 4-45 6-30
James Bond 007
in
Octo Pussy
(Cinemascope Colour)
[Sexy Action and Thrills]

**வெலிங்டன்**
10-30, 2-30 4-30, 6-30
Sean Connery Real
James Bond 007 in
THE BRIDGE TWO FAR
[Action Film]


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை.

## அலுமினிய வேலைகள்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கணிதத்துறையில் அலுமினியத்தின்மூலம் பிரிவுபடுத்தும் வேலைக்கான (Aluminium Partitioning) விண்ணப்பங்கள் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து கோரப்படுகின்றன.

விண்ணப்பத்திற்கு 100/-கட்டணம் செலுத்துவதன்மூலம் உரிய படவரைவுகளையும், கேள்விப்பத்திரங்களையும் இம்மாதம் 20-ம் திகதிவரை பல்கலைக்கழக வேலைப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளமுடியும்.

விண்ணப்பங்கள் அனுப்புவதற்கான கடைசித் திகதி 25-02-1986 ஆகும். விண்ணப்பக் கடித உறையின் இடது புற மேல் மூலையில் பர/F/SK/4/25/02/86 என்ற இலக்கம் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**பதிவாளர்**

யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
இலங்கை,
திருநெல்வேலி,
14-02-1986. (A 248)

## வை.எம்.சி.ஏ இன்று கூட்டம்

(சுண்டுக்குளி)

நவாலி வாலிப கிறிஸ்தவ சங்கத்தினரின் 96-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் நவாலி வை. எம். சி. ஏ மண்டபத்தில் தலைவர் திரு. ஜே ஐ தம்பிராசா தலைமையில்இன்று நடைபெறவுள்ளது.

## இளம்பெண்...

[1ம் பக்கத் தொடச்சி]

லும் ஊர்காவல்படையினராலும் இளம் பெண்கள் கைது செய்யப்பட்டதும், மானபங்கப்படுத்தப்பட்டதும், துப்பாக்கியால் சுட்டு கொலை செய்யப்பட்டதும் குறித்து அன்னையர் முன்னணிகவலையும், கண்டனமும் தெரிவித்துள்ளது.

இச்சம்பவங்கள் மேலும் நீடிக்காமலிருக்க மனிதாபிமான அடிப்படையில் அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அன்னையர் முன்னணி கேட்டுக் கொண்டிருக்கிறது.

## தொடர்ந்து...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருமலை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக் குட்படுத்தப்பட்டிருக்கும் பதினொரு இளம் பெண்களின் விபரம் வருமாறு;

எஸ். சுமங்கலா, லூர்து சுபத்திரா குரூஸ், மேரி பிளான்சார்ட் (பாக்கியம்), ஏ. சாந்தி, ஐ. விஜயா, என். சுவர்ணலதா, எஸ். சாந்தி, ஜி. சொய்ஸி மேடன்னு, எஸ். பவானி, எஸ் குஞ்சு, கே. சுமதி. (மா)

## ஊர்திகளுடன் கூடிய ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(சா. யோகநாதன்)

தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஏற்பட்டுள்ள கொடுமைகளை விளக்கும் ஊர்திகளுடன், யாழ் நகரில் இம்மாதம் 27-ம் திகதி சுலோக அட்டைகள் ஏந்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடத்த அண்ணா தி. மு. க. அனுசரணையுடன் 15 அமைப்புக்களைக் கொண்ட வெகுஜன போராட்ட கூட்டு குழு நேற்று தீர்மானித்துள்ளது.

யாழ். சிவன் கோவிலடியில் உள்ள கூட்டுக்குழு காரியாலயத்தில் திரு. பொன் மதிமுகராசா தலைமையில் 15 அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் இம்முடிவு எடுக்கப்பட்டது. இக்கூட்டத்தில் முன்னுள் யாழ். உதவி மேயர் திரு. ஏ. துரைராஜசிங்கம், யாழ். வர்த்தக சங்க செயலாளர் திரு எஸ். நமசிவாயம், முன்னுள் இலங்கை தி. மு. க. உறுப்பினர் திரு. சாமி, மற்றும் அமைப்புகளின் பிரதிநிதிகள், முஸ்லிம் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். [சு]

## கடற்பகுதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் வாழ்க்கை முறை ஏற்கனவே ஸ்தம்பித்துள்ளதென்றும் இந்த நடவடிக்கை காரணமாக தமிழ். முஸ்லிம் மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்ல முடியாது என்றும் தமிழர் விடுதலை கூட்டணி அறிக்கை கூறுகின்றது

ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள தமிழ்ப்பகுதி விவசாய வேலைகளை முழுவதாக கைவிட வேண்டிய நிலை உள்ளது என்றும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ச

## காணுமல்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆர்ஜன்டீனு, பிரேஸில், கொலம்பியா, சைப்பிரஸ். எல் ஸல்வடோர், சொத்கமாலா, ஹொண்டுராஸ், இந்தோனேஷியா, ஈரான், ஈராக், லெபனுன், நிக்கரகுவா, பேரு. பிலிப்பைன்ஸ், உருகுவே ஆகியன மேற்படி பட்டியலிலுள்ள இதர நாடுகளாகும்.

## தேவை

வடபிராந்தியத்திலுள்ள தொழிற்சாலைக்கு பயிற்சிப் பாதுகாவலர்கள் தேவை. விண்ணப்பிக்க விரும்புவோர் 25-02-86க்குமுன் கீழ்வரும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல. A247,
C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். A-247

## நன்றி நவில்கின்றேம்

மாசித் திங்கள் 10-ம் நாள் மணியாட்சி என்றும் எமது இல்வாழ்க்கை சிறப்புடன் மலர திருமணவிழாவிற்கு வாழ்த்துச்செய்திகள் அனுப்பியும், நேரில்கலந்து வாழ்த்தியும், அன்பைப் பகிர்ந்த அன்பு நெஞ்சங்கட்கு எமது இதயம் மலர்ந்த நன்றிகள் நவில்கின்றேம்.

**ஜோசப்பாலா மரியறேசா தம்பதிகள்.**
969/18, வளன்புரம், கொழும்புத்துறை.

12, சென்பற்றிக்ஸ். வீதி.
யாழ்ப்பாணம். (C 777)

## புனித இயக்கங்களுக்கு ஓர் உருக்கமான வேண்டுகோள்

10-2-86-ந் திகதி திங்கட்கிழமை இரவு பிரப்பங்குளம் வீதி T. G. இன்டஸ்ரீசில் உள்ள எமது களஞ்சியசாலையிலிருந்து எமது 30 சிறி 1094 இலக்க றேசா மினி பஸ்ஸை இனந்தெரியாதவர்கள் கடத்திவிட்டனர். இதனை புனித இயக்கங்கள் மீட்டுத்தருமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறேம். அல்லது தயவு செய்து இதனை செய்தவர்கள் உரிமை கோரவும்.

**நா. சண்முகம்,**
**ஸ்ரீகௌரி றேடேர்ஸ்,**
536, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம்.
(C 785)


தரமான பிரதிகளையே வழங்கும் வீடியோ பிரசாத்தின் மற்றுமோர் பிரமிட் வெளியீடு:

ரஜனிகாந்த், சத்தியராஜ், அம்பிகா நடித்த
(i) மிஸ்டர் பாரத்

சுரேஷ், விஜி நடித்த
(ii) இரண்டு மனம் (தரமான பிரதி)

M. G. R. இரட்டை வேடத்தில் நடித்த
(iii) ராஜா தேசிங் (V G. P,)

# வீடியோ பிரசாத்

இல. 232, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
C 251


## விடுதலை இயக்கங்களுக்கு மீண்டும்ஒருவேண்டுகோள்



எனது கணவர் வை. இராஜசுந்தரம் அவர்களை விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் அழைத்துச் சென்று இன்றுடன் ஆறு மாதங்களுக்கு மேலாகிறது.

கணவர் அழைத்துச் செல்லப்பட்ட மறுநாட்களில் ஒரு குறிப்பிட்ட விடுதலை இயக்கத்தைச் சேர்ந்தவர்களெனத் தங்களை என்னிடம் அறிமுகப்படுத்தியவர்களில் ஒருவர் விசாரணை முடிந்ததும் சிலநாட்களில் எனதுகணவர் விடுவிக்கப்படுவாரெனவும் எந்த வித ஆரவாரங்களுக்கும்இடங்கொடுக்காமல் இருக்குமாறும் கேட்டுக்கொண்டார். அதற்கிணங்க அவர்கள்மீது நம்பிக்கைகொண்டு, கணவரை விடுதலைசெய்யக்கோரி அன்றைய நாட்களில் பொதுமக்கள் எடுத்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தினேன்

இன்று ஆறுமாதங்களுக்கு மேலாகியும் எனது கணவர் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இன்னும்கூட நான் விடுதலை இயக்கத்தினர் என்னிடம் தந்த வாக்குறுதி மீது நம்பிக்கை இழக்கவில்லை. அவர்கள் சொன்னதை நிறைவேற்றுவார்களென நம்பிக்கைகொண்டு எனது கணவரை என்னிடம் ஒப்படைக்குமாறு மீண்டும் தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

அன்புடன்
**திருமதி ப. இராஜசுந்தரம்.**
(A 253)


நியூவிக்ரேஸ்
புதிய வீடியோ பட வெளியீடு
1. இரண்டு மனம் தொம்சன்
✶ சுரேஷ் ✶ விஜி
நியூவிக்ரேஸ்
எலெக்ரோனிக் கொம்பிளெக்ஸ்
தொலைபேசி : 23532
A 250


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

இங்கிலாந்து புறூக்லி மள்பானே ரேட்டு, அபிராம சுந்தரி பொன்னம்பலம் ஆகியநான், மதுரங்குழி புத்தளம் வாசியான நடராசா விபுலானந்தனுக்கு கொடுத்த தத்துவ உறுதி 5-9-1985ல் அருணி குலரத்திஞவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உறுதி 33ஆல் வழங்கப்பட்ட தத்துவ உறுதியை இத்தால் வலிமையில்லாமல் அழித்துவிடுகிறேன் என்று இலங்கை அரசாங்கத்துக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகிறேன்.

C-627



## For Sale

LATEST MODEL JVC GX. 59C CAMERA
Peformance (Auto Zooming) (Two Speed)
Auto White Balance
and NATIONAL N V 100 PORTABLE DECK

**Tele Corner,**
MODERN MARKET, CHAVAKACHCHERI.

(C 697)



யாழ்ப்பாண மாவட்ட

## கொம்பிளான் பாவனையாளருக்குச் செய்தி

கொம்பிளான் விநியோகம், விற்பனை ஆகியவற்றைத் தற்காலிகமாக நிறுத்துவதென்றும் தற்போதைய கையிருப்புகளைப் பாவனைக்கு விடாது திரும்ப் பெற்றுக் கொள்வதென்றும் உற்பத்தியாளர்கள் செய்து கொண்ட முடிவுக்கமைய, யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள பொது மக்களும் வியாபாரிகளும் தம்வசமுள்ள கொம்பிளான் கையிருப்புகளை, சிற்றி மெடிகல்ஸ் 487, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் எஸ். வி. முருகேசு 154, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். ஆகிய கடைகளில் கையளித்தால் அவர்கள் அவற்றுக்குரிய பணத்தை திரும்பத் தருவார்கள்.

பாவனையாளர்களும், வியாபாரிகளும் தமது பணத்தைத் திரும்பப் பெறுதல் தொடர்பான சகல கோரிக்கைகளையும் 1986 பெப்ரவரி 28-ம் திகதியளவில் சமர்ப்பித்தல் வேண்டும். இத் திகதிக்குப் பின்னர் எவ்வித கோரிக்கைகளும் ஏற்றுக் கொள்ளப்படா.

**கிளாக்ஸோ சிலோன் லிமிட்டெட்**
த பெ 1653,
கொழும்பு.

A 243


## இன்றைய பலன்

மாதம்- மாசி
திகதி- 3 (15 - 2 - 1986)
கிழமை- சனி
திதி- ஷஷ்டி
முற்பகல் வரை
நக்ஷத்திரம்- அச்சுவினி
காலை 8. 23ன் மேல் பரணி

**மேடம்:** இதயம் எரிமலையாகும். ஏமாற்றத்திற்கு இடமுண்டு. எதிரிகள் தாக்குவர். உடல் நலமும் பாதிக்கப்படலாம்.

**இடபம்:** திடீர் வரவுகளுக்கும் இடமுண்டு. வாழ்க்கையில் நல்ல திருப்பம் ஏற்படும் குடும்பத்திலும் சுவையான நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

**மிதுனம்:** வியாபாரம் செய்வோர்களுக்கு சிறப்புண்டு பண விவகாரங்களில் மகிழ்ச்சி நிலவும். வெளிநாட்டுப்பயணத்திற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும்.

**கடகம்:** சுறுசுறுப்புக் குன்றும். உமது சொந்த வாழ்க்கையில் மற்றவர்கள் தலையிடுவார்கள். குடும்பத்திலும் சச்சரவு தென்படும்.

**சிங்கம்:** பூமியால் லாபமுண்டு. புகழும் சேரும். சிலருக்கு உடல் நலம் பாதிக்கப்படலாம். வாய்வுப்பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

**கன்னி:** போட்டா போட்டிகளில் ஈடுபடுவதன் மூலப பணம் பாழாகும். முகமை பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கை நன்று. சிநேகிதர் மூலம் சிக்கல்களும் தோன்ப.

**துலாம்:** சகோதர வழிச் சுகமுண்டு. முயற்சி கைகூடும். திடீர் வரவும் உண்டு.

**விருச்சிகம்:** தாய் வழியால் பெருமைகள் சேரும். தனத்துடன் வாழ்வும் உண்டு. மருத்துவத்துறையில் ஈடுபடுபவர்களுக்கு மகத்தான தினம்.

**தனுசு:** வியாபாரத்துறையில் புதிய மாற்றத்தை மனம் நாடும். பயன்தரும் பிரயாணம். நண்பர்களின் ஆதரவு இவற்றுடன் தெய்வத்தின் உதவியுமுண்டு.

**மகரம்:** பிரயாணத்தின் போது பொருள் தவறக்கூடும். திருடர் பயத்திற்கும் இட

[ 11ம் பக்கம் பார்க்க]

## இப்படியும் நடக்கிறது

தொலைக்காட்சிப் பாவனை சம்பந்தமாக இலங்கை மன்றக் கல்லூரியில் அண்மையில் ஒரு மதிப்பீடு நடந்தது. அதன் விபரம் இதுதான்:

தமிழ் மக்கள் வாழும் பகுதியில்தான் அதிக எண்ணிக்கையிலான தொலைக்காட்சிப் பெட்டிகள் இருக்கின்றன.

அதாவது; எழுபத்துமுன்று சதவிகிதமான தொலைக்காட்சிப் பெட்டிகள் தமிழ்ப் பகுதிகளில்தான் உண்டு. அதாவது; தமிழ் மக்கள்தான் கூடுதலாக தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பயன்படுத்துகின்றனர்.

'கலர்' தொலைக்காட்சிப் பெட்டிகளைப் பொறுத்தவரை ஐம்பத்து இரண்டு வீதம் தமிழ் மக்கள் மத்தியில் தான்.

இதன்படி கணக்குப்பார்த்தால்; குறைந்தது இருபது முதல் இருபத்தைந்து சதவிகித நிகழ்ச்சிகள் அதாவது தமிழ் நிகழ்ச்சிகள் ஒதுக்கப்படவேண்டும்.

ஐந்து சத விகித நிகழ்ச்சிகளாவது தமிழ் மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறதா?

கறுப்பு — வெள்ளையோ, கலரோ...... அருமையான கழுத்தறுப்பு!

-ஊடுருவி


## இடமாற்றம்

**பருத்தித்துறை குகன் ஸ்ரூடியோ**

10-2-86 முதல் மந்திகை கந்தமுருகேசனார் சிலை சந்திக்கு கிழக்குப் புறமாகவுள்ள வீட்டுக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதை பொதுமக்களுக்கு அறியத்தருகின்றோம்.

(C 762)



## மின்தறி நெசவாளர் தேவை

பண்டத்தரிப்பில் அமைந்துள்ள நெசவுத் தொழிற்சாலையில் வேலை செய்வதற்கு அனுபவமுடைய நெசவாளர் தேவை.
மேற்படி பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்காக எதிர்வரும் 22ஆம், 23ஆம் திகதிகளில் காலை 9-00 மணிக்கு பண்டத்தரிப்பு நெசவாலைக் காரியாலயத்தில் சமுகம் அளிக்கவும்.

**Solid Engineers,**
PANDATHERUPPU.

[A-234]



## ஊரடங்கு வாழ்வு

ந. சபாரத்தினம் (ஈழநாடு)

ஈழநாடு பத்திரிகையில் 1984ல் வெளியான முக்கிய ஆசிரிய தலையங்கங்கள் அனைத்தும் ஒரு அழகிய புத்தக வடிவில் வெளிவந்துள்ளன.

ஈழத் தமிழ் மக்களின் போராட்ட வரலாற்றில் உண்மையாக எழுதப்பட்ட பதிவேடுகள் இவை.

விலை ரூபா 50/-. சொற்ப பிரதிகளே உள்ளன.

விற்பனையாளர்கள்:

**பூபாலசிங்கம் புத்தகசாலை,**
இல. 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23631 — தந்தி: Books Jaffna

(A 246)



## தேவை

அனுபவம் உள்ள சிலிண்டர் மெஷின் மைண்டர், பிளேட்டின் மெஷின் மைண்டர், பைண்டர், எழுத்துக்கோர்ப்பாளர்கள் தேவை. இத்துறையில் பயிற்சிபெற விரும்பும் இளைஞர்கட்கும் சந்தர்ப்பம் உண்டு. பயிலுநர்கள் யாழ். நகர் சுற்றுவட்டாரத்தில் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும்.

நேரில் வரவும்:

**செட்டியார் அச்சகம்,**
428, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

[C 691]



இலங்கையில் முதல் முதலாக

## தேசிக்காய் வாசனையுடன்




**எம்டீ சோப்**




ரூபா 2/-




ரூபா 12/50

இதே விலையில் இதைவிட சிக்கனமானதும் சிறந்ததுமான வேறொரு சவர்க்காரம் வாங்க முடியுமா...... இன்றே வாங்குங்கள்

# புதிய எம்டீ சோப்

இனாம்: (1) ஒவ்வொரு புதிய பார் சோப்புடனும் ஓர் பொக்கற் கலண்டர்.
(2) 5 எம்டீ சோப் மேலுறைகளுக்கு ஓர் பொக்கற் கலண்டர்.
(3) 30 எம்டீ சோப் அல்லது 5 பார்சோப் உறைகளுக்கு ஓர் அப்பியாசக் கொப்பி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பில் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பாக தமிழ் ஈழ விடுதலை இயக்கம், நேற்று முன் தினம் அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''சில நாட்களுக்கு முன் மட்டக்களப்பில் நடைபெற்ற சில விரும்பத்தகாத சம்பவங்கள் தொடர்பான விளக்க அறிக்கையொன்றை கடந்த 7ம் திகதி வெளியிட்டோம். அவ் அறிக்கையானது ஈரோஸ் இனர் மீது வீண்பழி சுமத்தும் நோக்குடன் வெளியிடப்படவில்லை. ஆனாலும் மட்டக்களப்பில் தற்சமயம் செயலாற்றி வரும் ஈரோஸ் தோழர்கள்தளத்திலுள்ள ஈரோஸ் நிர்வாகிகளுடன் ஒத்துழைக்காத பட்சத்திலேயே ஈரோஸ் இனரால் எமக்கு ஏற்பட்ட பாதிப்பை மக்கள் முன் வைத்தோம். இதனை ஈரோஸ் இனது நிர்வாகிகள் உறுதியற்ற செயற்படுத்தப்படாத உறுதிகள் மூலமே உணர்ந்து கொண்டோம்.

''இவ்வாறான இவர்களின் அராஜகத் தன்மைக்கும் துர்ப்பிரசாரத்திற்கும் எதிராக நாம் நடவடிக்கை எடுப்பது தவிர்க்கமுடியாததாகும். அவ்வாறான நிலை உருவாகும் பட்சத்தில் மக்கள் எம்முடன் ஒத்துழைத்து அராஜக வாதிகளை இனங்கண்டு தூக்கி எறிவதன்மூலம் தேசிய விடுதலைப் போராட்டத்தை முனைப்படையச் செய்யவேண்டும்.

''உண்மை நிலை இவ்வாறிருக்க தேவையற்ற விதத்திலும் ஆதாரமற்ற நிலையிலும் இவர்கள் எம்மைக் குற்றம் சாட்ட முற்படுவது கவலைக்கிடமானது. எவ்வாறாயினும் இவர்களின் அறிக்கைக்குப் பதிலளிக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

''ஒந்தாச்சிமடக் கொள்ளை சம்பந்தமாக நாம் உடனடி விசாரணை மேற் கொள்வதுடன் அதற்கு ஈரோஸ் இனரின் உதவியையும் நாடியிருந்தோம். இதனை நாம் பூரண விசாரணையின் முடிவில் கடுமையான நடவடிக்கை எடுக்கவும் தயங்க மாட்டோம். மேலும் இஸ்லாமிய மக்களை பிரித்தாளும்நோக்குடன் செயற்படும் அரசின் சதிக்கு எமது உறுப்பினர் சிலர் உடந்தையாக இருந்தனர் என்று ஆதாரமற்ற முறையில் தெரிவிப்பதன் மூலம் இவர்கள் செய்ய முற்படுவது என்ன? இன்று எம்முடன் பரவலாக ஒத்துழைத்து செயற்பட்டு வரும் இஸ்லாம் மக்களை எம்மிடம் இருந்து தேசிய விடுதலைப் போராட்டத்தில் இருந்து அன்னியப்படுத்துவதற்கான சாத்தியக் கூறுகளை இவர்களின் கூற்று ஏற்படுத்தும் எனவே இவர்களும் இனவாத அரசு மேற்கொள்ளும் அதே பணியையே சில நுணுக்கமான முறைகளுடன் கையாளுகின்றனரா? இவ்வாறான இவர்களின் தெளிவற்ற கூற்று தமிழ் இஸ்லாம் பிரிவினையையே மேலும் வளர்க்கும்.

இவர்கள் (ஈரோஸ்) இவ்வாறு செயற்படுவதை விடுத்து தவறுகளை தவறுகளாக இனங்கண்டு செயற்படவேண்டும் என எதிர்பார்க்கின்றோம். தவறுகளை பகிரங்கமாக ஒப்புக்கொள்வதே தவறுகள் திருத்தப்படுவதற்கான சாத்தியக் கூறுகளின் முதற்படி.

''இதனை உணர்ந்து மேலும் இயக்க வாதத்தை வளர்த்து இயக்க மோதல்களுக்கான அடித்தளங்களை அமைக்க மாட்டார்கள் என நம்புகிறோம்.''

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

[இல 84 அ-பிரிவுகள் 524,532]

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ் சென்ற கரவெட்டி வடக்கைச் சேர்ந்த வல்லிபுரம் சிவலிங்கம் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

சிவலிங்கம் இராசலிங்கம், 48/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனுதார்.

மரணசாதன நியாதிக்கம் } இல ரி/3940

1. வல்லிபுரம் சிவலிங்கம் மகள் மலரேஸ்வரி
2. வல்லிபுரம் சிவலிங்கம் மகள் விமலகுலேஸ்வரி
3. சிவலிங்கம் சிவனேசலிங்கம்
4. வல்லிபுரம் சிவலிங்கம் மகள் சிவஞானேஸ்வரி:

அனைவரும் 48, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்.

மேலே உள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1986ம் ஆண்டு மாசி மாதம் 28ம் நாளன்று முற்பகல் 9 00 மணிக்கு இந் நீதிமன்றத்தின் முன்னர்தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு, இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,

**கு.குலசிங்கம்,**

பதிவாளர்.

1985ம் ஆண்டு 12ம் மாதம் 4ம் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. [C764]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

[இல 84 அ-பிரிவுகள் 524,532]

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ் சென்ற கரவெட்டி வடக்கைச்சேர்ந்த வல்லிபுரம் சிவலிங்கம் பெண் நேசம்மா என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர்.

சிவலிங்கம் இராசலிங்கம் 48/1, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மனுதார்.

மரணசாதன நியயாதிக்கம் } இல.ரி/3939

1. வல்லிபுரம் சிவலிங்கம் மகள் மலரேஸ்வரி
2. வல்லிபுரம் சிவலிங்கம் மகள் விமலகுலேஸ்வரி
3. சிவலிங்கம் சிவனேசலிங்கம்
4. வல்லிபுரம் சிவலிங்கம் மகள் சிவஞானேஸ்வரி

அனைவரும் 48. அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

எதிர்வாதிகள்.

மேலே உள்ள இலக்கங்கொண்ட மரண சாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும், 1986ம் ஆண்டு மாசி மாதம் 28ம் நாளன்று முற்பகல் 9.00மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக்கட்டளைப்படி,

**கு.குலசிங்கம்,**

பதிவாளர்.

1985ம் ஆண்டு மார்கழிமாதம் 4ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. [C765]

## 'மாற்று' விமர்சன அரங்கு

(யாழ்ப்பாணம்)

காலாண்டு சஞ்சிகையான 'மாற்று' பற்றிய ஒரு விமர்சன அரங்கு நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலையத்தின் ஆதரவில் இன்று மாலை நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நிலையத் தலைவர் திரு. நா. அலோசியஸின் தலைமையில் நடைபெறும். மேற்படி கருத்தரங்கில் திருவாளர்கள் சொக்கன், இ. மயில்வாகனம், ஈழத்துச் சோமு, புதுவை இரத்தினதுரை, செ. துரைசிங்கம், வ. வேலாயுதபிள்ளை ஆகியோர் விமர்சன உரைகளை ஆற்றுவார்கள்.


## ஊர்காவல்...

3-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்னைகளையும் சமாதான முறையில் தீர்க்கக்கூடிய அமைப்பாக ஏழு உறுப்பினர்களைக்கொண்ட 'விசாரணை சபை' ஒன்றினை அமைத்துச் செயல் படவேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது.

விழிப்புக்குழுவுக்கென யாப்பு ஒன்று தயாரிக்கப்பட்டு நிர்வாக சபையில் அது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## 31ம் நாள் நினைவஞ்சலி



**S. மைக்கல் யோசவ்**

பிறப்பு 1916-10-10

இறப்பு 1986-01-16

எங்கள் குலவிளக்காய் அன்டபுன் வழிநடத்தி ஆறாத்துயரில் ஆழ்த்தி விட்டு அணைந்த எம் அன்புத் தீபமே! உங்கள் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அவரின் இறுதிக் கிரியைகளில் கலந்தும் அனுதாபம் தெரிவித்தவர்கட்கும் எம் நன்றியைத் தெரிவிக்கிறோம்.

மனைவி.
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

823, ஆஸ்பத்திரிறோட்,
யாழ்ப்பாணம்.
[C768]

## பாரதி சனசமூக நிலையத்துக்கு நிரந்தரக் கட்டடம்

[யாழ்ப்பாணம்]

இருபாலை கிழக்கு பாரதி கலாமன்றத்தினதும், பாரதி சனசமூக நிலையத்தினதும் வருடாந்தப் பொதுக்கூட்டம் நிலையத் தலைவர் திரு க. வீரவாகு தலைமையில் நடைபெற்றபோது, சனசமூகநிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைக்க காணி வழங்கிய இருபாலை வீரசக்திப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா திரு. நா. கந்தையாவுக்கும், வெளிநாட்டுப் பொருள் உதவியைப் பெற்றுத் தரும் முயற்சியில் ஈடுபட்டுள்ள கலாநிதி வ. கணேசலிங்கத்துக்கும் தலைவர் தமது உரையில் நன்றி கூறினார்.

'மாதர்அணி' ஒன்று அமைக்கவும் இக்கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

புதிய நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது தலைவராக திரு. க. வீரவாகு தெரிவுசெய்யப்பட்டார். ஏனைய நிர்வாகிகள் விபரம்: பொதுச்செயலாளர் ப. குமாரசிங்கம், பெரும் பொருளாளர் செ. சபாரத்தினம், பொருளாளர் க. திருவருட்செல்வன், உபதலைவர்கள்: இ. சண்முகநாதன், வி. செல்லப்பா, எஸ்.பாலசுப்பிரமணியம், இணைச்செயலாளர்கள் வி. இராமலிங்கம், க. தணிகாசலம், காப்பாளர்கள் கலாநிதி வ. கணேசலிங்கம், நா. கந்தையா, செ. சபாரத்தினம், போல் சண்முகம்.

மேலும் ஒன்பது பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. [ஐ]

## புதிய நிர்வாகிகள்

(அராலி)

அராலி தெற்கு மாவத்தை நாச்சிமார் அம்பாள் ஆலயப் பரிபாலனசபையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் தலைவர் திரு. நா. நடராஜா தலைமையில் நடைபெற்றது

பின்வருவோர் புதியநிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் நா. நடராஜா, உபதலைவர் நா. பர்ப்பநாதன், இணைச்செயலாளர்கள் செல்வன் சி. ஜெயராஜ், திருமதி. லோ. யோகேந்திரராஜா, பொருளாளர் செல்வன் ந. தில்லைராஜா.

ஒன்பதுபேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## அராலி...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

வலி மேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சகல விளையாட்டுக்கழகங்களையும் இப்பயிற்சி முகாமில் கலந்துகொண்டு பயிற்சியை எடுக்குமாறு விளையாட்டு அதிகாரி திரு. கா. அரிச்சந்திரா கேட்டுள்ளார்.

## இன்றைய பலன்

(10-ம் பக்கத்தொடர்ச்சி]

முண்டு விவசாயிகள் முன்னெச்சரிக்கை நன்று.

கும்பம்: களஸ்திரவழியால் நன்மைகள் வந்து சேரும். குடும்பத்தில் தென்றல் வீசும். செலவீனங்களும் கட்டுப்படியாகவே இருக்கும்.

மீனம்: தொழில் புரியும் இடத்தில் கருத்து மோதல்கள் தோன்றக்கூடும் கொடுக்வாங்கல் மூலம் எதிரிகளைத் தேடிக்கொள்வீர்கள் பொருள் விடயத்தில் கவனம் செலுத்தவும்.

**திருமலை**
**வே. ரவீந்திரன்**

## தவக்காலச் சிந்தனை



**4ம் நாள்**

''மருத்துவன் நோய் அற்றவர்க்கன்று; நோயுற்றவர்க்கே தேவை. நீதிமான்களை அன்று; மனந்திரும்பும்படி பாவிகளையே அழைக்க வந்துள்ளேன்'' (லூக் 5/31).

பாவிகள், பரதேசிகள், தாழ்ந்தவர்கள், தனித்துவிடப்பட்டவர்கள், ஏழையர்கள், எள்ளிநகையாடப்படுபவர்கள் போன்றோரைத் தேடியே கிறிஸ்து வந்தார்.

இவர்கள் உலகின் கண்களிலே இழிந்தோராகத் தோன்றலாம். எனினும் இறைவனின் இரக்கத்தைப் பெறும் பாக்கியவான்கள் இவர்களே. நாளாந்தம் இவர்கள் சமுதாயத்துத் தீய சக்திகளால், சாதித்துவேஷங்களால், அதிகார மிறட்டுதல்களால். அன்பில்லாத அசுரத்தனத்தினால் உதைக்கப்படலாம்; வதைக்கப்படலாம். எனினும், இவர்களுக்கு வாழ்வு வழங்க கண்ணீரைத்துடைக்க, கட்டி அரவணைக்க ஒரு சில நல்ல உள்ளங்கள் இருக்கத்தான் போகின்றார்கள்.

இவர்கள் அன்பினை அள்ளி அளளிக்கொடுப்பவர்கள் தமது சொந்த நலனுக்காக தமது நற்பெயருக்காக, புகழுக்காக வழாது, மற்றவர்களின் மகிழ்ச்சிக்காகவும் வளர்ச்சிக்காகவும் தம்மை அர்ப்பணித்து வாழும் புனிதர்கள் இவர்களே! இறைவன் வாழும் இல்லங்களாக திகழும் இவர்களது உள்ளங்கள் என்றும் நிறைவு பெற்றவையே!

**வின்சென்ற் பற்றிக்**
**அ. ம. தி**

## ரூபவாஹினி

மாலை:

5-00 செய்திகள்
5-05 உள்ளூர் உதைபந்தாட்ட நிகழ்ச்சி
5-30 விசேஷ ரூபவாஹினி நிகழ்ச்சி
6-30 செய்திகள் (தமிழ்)
7-00 'ஹபண' ரூபவாஹினி நிகழ்ச்சி
7-40 செய்மதி தொடர்புச் சேவையின் முன்னேற்றம்
8-00 செய்திகள் (சிங்களம்)
8-25 'யசோரவய' ரெலி நாடகம்
9-00 செய்திகள் (ஆங்கிலம்)
9-20 விசேட இசை நிகழ்ச்சி
10-50 'ரவ பிரத்திரவ'
11-00 ஒளிபரப்பு முடிவு

## நஷ்ட ஈடு கிடைக்கிறது

(சித்தன்கேணி)

சங்கானை மக்கள் வங்கியில் கொள்ளையடிக்கப்பட்ட நகைகளுக்கு நஷ்டஈடு தற்போது வழங்கப்பட்டுவருகின்றது

சங்கானை மக்கள் வங்கியில் நகைகள் அடகுவைத்து கொள்ளையடிக்கப்பட்ட நகைகளுக்கு தற்போது நஷ்டஈடு யாழ். கோட்டையில் வைத்து வழங்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

### யாழ். மாவட்டத்தில்

# 1490 பேருக்கு வீடமைப்புக் கடன்

(சித்தன்கேணி)

பத்துலட்சம் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் இந்த ஆண்டு முடிவடைவதற்குள் யாழ். மாவட்டத்தில் சுமார் 1490 பேருக்கு வீடமைப்புக்கடன் வழங்கப்படவுள்ளது.

யாழ் மாவட்டத்திலுள்ள 149 கிராம சேவை அலுவலர் பிரிவிலுமிருந்து 1490 பேருக்கு இந்த ஆண்டு முடிவடைவதற்குள் வீடமைப்புக கடன் வழங்குவதற்கு யாழ்.மாவட்ட தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

ஒவ்வொருகிராமசேவை அலுவலர் பிரிவிலுமிருந்து பத்துப் பேர் தெரிவுசெய்யப்படவுள்ளனர். இவர்களைத் தெரிவு செய்யும் பொறுப்பு அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உதவி அரசாங்க அதிபர்கள் அவ்வப்பகுதி வீடமைப்புக் குழுக்களின் உதவியுடன் விண்ணப்பதாரிகளை தெரிவு செய்வதற்குரிய நடவடிக்கையில் தற்போது ஈடுபட்டுள்ளனர்.

வீடமைப்புக்குழுவில் உதவி அரசாங்க அதிபர் விசேட சேவை அலுவர் கிராமசேவை அலுவலர், வீடமைப்பு உத்தியோகத்தர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். விசேடசேவை அலுவலர்களினால் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் வீடமைப்புக்கு[illegible] பரிசீலனைக்குப்பின்பு தெரிவு செய்யப்படு[illegible] கள் இந்த மாதம் முடிவடைவதற்குள் யாழ். மாவட்ட தேசிய வீடமைப்புஅபிவிருத்தி அதிகார சபைக்கு அ[illegible] வைக்கப்படவுள்ளன.

# உயிர் தப்பிய மீனவர்கள் யாழ். கோட்டையில்

## உறவினர் சந்திக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

பாலைதீவுக் கடற்பகுதியில் படகில் மீன்பிடிக்கச் சென்றபொழுது கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட குருநகரைச்சேர்ந்த ஐந்து மீனவர்களும் யாழ். கோட்டைக்குக் கொண்டுவரப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

இம்மீனவர்களின் மனைவிமாரும், தாய்மாரும் இன்று யாழ். கோட்டைக்குச் சென்று அவர்களைச் சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன.

ஞானப்பிரகாசம் ஐஸ்னேவர். அல்போன்ஸ் லெக்மன், யோசப் துரைமணி, அந்தோனிப்பிள்ளை ராஜா, ராஜமணி அன்ரன் ஆகியஐவருமே யாழ். கோட்டையில் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களுள் ஞா. ஐஸ்னேவர் எரிகாயங்களுக்குள்ளாகியிருப்பதாகவும், அவருக்கு யாழ். கோட்டைக்குள் உள்ள இராணுவ ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை பாலைதீவுக் கடற்பகுதியில் இடம்பெற்ற பீரங்கித் தாக்குதலின்போது ஏழுபேருடன் மீன்பிடிக்கச் சென்ற படகு குண்டுத் தாக்குதலுக்கிலக்கானதும், அதிலிருந்த ஏழுபேரில் இருவர் கடலில் நீந்திக் கரை சேர்ந்ததும், மீதி ஐவரும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டதும் தெரிந்ததே.

(வி-மா)

# திருநெல்வேலி அனாதைகள் இல்லத்துக்கு ரூ. 4 லட்சம் செலவில் 2 கட்டிடங்கள்

## இன்று அடிக்கல் நாட்டுவிழா

[யாழ்ப்பாணம்]

திருநெல்வேலி முத்துத்தம்பி அனாதைகள் இல்லத்துக்கு நான்கு லட்சம் ரூபா செலவில் புதிய நூல்நிலையமும் அலுவலகமும் அமைத்துக் கொடுக்க வட்டு. லயன்ஸ் கழகமும் நோர்வே நாட்டுத் 'தொண்டேம்' நிறுவனமும் முன்வந்துள்ளன.

இவ்விரு கட்டிடங்களுக்குமான அத்திபாரக் கல்நாட்டு விழா இன்று பகல் 11-30 மணிக்கு நடைபெறும். யாழ் அரசாங்க அதிபர் திரு. எம் பஞ்சலிங்கம் கல்லை நாட்டிவைப்பார்.

இவ்விழாவில் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர், வட்டு. லயன்ஸ் செயலாளர் எஸ். ரி. வைத்திலிங்கம், லயன்ஸ் கழகங்களின் பிரமுகர்கள் மற்றும் அனாதை இல்லத்துடன் சம்பந்தப்பட்ட பலரும் கலந்துகொள்வார்கள்

வட்டு. லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த சர்வதேச தலைவர் லயன் இ. விஜயரத்தினம் மேற்கொண்ட பெருமுயற்சியினால் அனாதை இல்லத்துக்கு இவ்விரு கட்டிடங்களும் அமைக்க ஏற்பாடாகியுள்ளது. இந்த அனாதை இல்லத்துக்கு மேலும் ஆறு லட்சம் ரூபா பெறுமதியான வேலைகளைச் செய்துகொடுக்க வட்டு லயன்ஸ் கழகமும் - 'தொண்டேம்' நிறுவனமும் முன்வந்துள்ளன.

1981ம் ஆண்டு அனாதை இல்லத்துக்கு மேற்படி இருகட்டிடங்களையும் கட்டிக்கொடுக்க முயற்சி எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

வட்டு லயன் தலைவர் டபிள்யூ. என். தேவகடாச்சம் மேற்கொண்ட முயற்சியால் வேலைகள்மீண்டும் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இக்கட்டிடங்களுக்கான வரைபடங்களை, வரைந்து மேற்பார்வைசெய்பவர்கட்டிடக்கலைஞர் திரு குணசிங்கம் ஆவார்.

### ஆசிரியர்களுக்கான

# சேவைக்கால பயிற்சி வகுப்பு

## யாழ். இந்துவில் இன்று நடக்கும்

(யாழ்ப்பாணம்)

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இன்று நடைபெறவிருந்த ஆசிரியர்கட்கானசகலசேவைக் காலப் பயிற்சி வகுப்புகளும் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறும் என்று பயிற்சிக்குப்பொறுப்பான கல்வி அதிகாரி நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

தேசிய சான்றிதழ் பரீட்சை காரணமாகவே இப்பயிற்சி வகுப்புகள் இடமாற்றப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது.

# "கலை, கலாசாரத்தைக் காக்க மாணவரின் பங்கு அவசியம்"

[உடுவில்]

"மாணவர்கள் வகுப்பறைகளில் கற்கும் ஏட்டுக்கல்வியுடன் நின்று விடாமல், கலை, கலாசார நிகழ்ச்சிகளிலும் பங்குபற்றவேண்டும். அப்போது தான் எமது பாரம்பரியமான கலை, கலாசாரங்களை அழிந்து விடாமல் பாதுகாக்கலாம். கலை என்ற பெயரில் நடைபெறும் வெறும் களியாட்டங்களை மாணவர்கள் பின்பற்றுமல் எமது சொத்தான இயல், இசை, நாடகத்துறைகளை கற்றுக்கொள்ள வேண்டும்."

இணுவில் அமெரிக்க மிசன் தமிழ்கலவன் பாடசாலை அதிபர் திரு. செ. சோதிப்பெருமாள் மேற்படி பாடசாலை மாணவர்கள் நடாத்திய கலை விழாவுக்கு தலைமைவகித்து பேசுகையில் கூறினர். ——

# வயல்காவலர் நால்வர்கைது

(வவனியா)

வவனியா-மன்னார் வீதியில் இரவு ரோந்துசென்று திரும்பிய ராணுவத்தினர் வயல் காவல்புரிந்துவிட்டு அதிகாலை வீடு திரும்பிக்கொண்டிருந்த நால்வரைக் கைதுசெய்து கொண்டுபோயுள்ளனர்,

# நாளை கருத்தரங்கு

[சுழிபுரம்]

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச்சங்கக் கிளைக்குழு பணிப்பாளர் சபை உறுப்பினர்களுக்குரிய கருத்தரங்கு, சங்கமின் தறி மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமைகாலை நடைபெறவுள்ளது.

சங்கத்தலைவர் திரு. நா சிவசுப்பிரமணியம் தலைமையில் இக்கருத்தரங்கு நடைபெறும்

# கண்காட்சியில் கலந்துகொள்ள அழைப்பு

(வண்ணார்பண்ணை)

யாழ். பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான மன்றம் இ[illegible] மாதம் 21ம்திகதி முதல்யாழ்ப்பாணத்தில் நடத்தவிருக்கும் கண்காட்சியில் சகல உள்ளூர் உற்பத்தியாளர்களையும் பங்குபற்றுமாறும் கண்காட்சிக்கான உற்பத்திப்பொருட்களை முன்கூட்டியே அனுப்பிவைக்குமாறும் கேட்கும் சுற்றுநிருபம் ஒன்றை மூலவள உற்பத்தியாளர் சங்கங்கள் நிறுவனங்கள் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றிற்கு அனுப்பிவைக்குள்ளது.

# மூதூரில் கைதான இளைஞர் விபரம்

(மூதூர்)

மூதூரில் கைது செய்யப்பட்டு திருமலைக்கோட்டையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இளைஞர்கள் விபரம்:

பி கிங்ஸ்லி (ஆசிரியர் 22 வயது), எஸ். போல் ராஜ்குமார் (21 வயது), பி. கமில்டன் திசேரா (18 வயது). கோவிந்தசாமி ஞெபேட் சுதாகர் (18 வயது), பாலன் ரங்சன் (19 வயது), அருளப்பன் ஜோசப் சபாநாதன் செனடி (21 வயது), ஜேம்ஸ் தேவா (20 வயது), ராயப்பு சேகர் (அன்ரனி) (18 வயது). (மா)

### சமூகவிரோதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தமது இயக்கத்தின் இருப்பிடங்களையும், மற்றைய சகதோழமை இயக்கங்களின் இருப்பிடங்களையும் காட்டிக் கொடுப்பதற்கான எழுத்துமூலமான கடிதமும், வரைபடமும் கையும் மெய்யுமாக இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாகவும், அதனைத் தொடர்ந்து அவரின் தந்தை, மனைவி உட்பட சமாதான சபை, விழிப்புக்குழு ஆகியவற்றின் முன்னிலையில் விசாரணைசெய்த பின்னர் இத்தீர்ப்பு வழங்கப்பட்டதாகவும் தமிழீழ இராணுவம் தெரிவித்துள்ளது (மா)

### வலயப் பகுதி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ரம் மீற்றர் வலயத்தில் உள்ள கல்லூரிகளின் நிலை பற்றியும், மாணவர்களது கல்விப் பாதிப்பு, பயப்பீதி என்பன பற்றியும் எடுத்துக்கூறியது. முக்கியமாக யாழ் நகர கல்லூரிகள் பாதிப்பு நிலை பற்றித் தெளிவு படுத்தப்பட்டது.

இச்சந்திப்பின் போது யாழ். மத்தியகல்லூரி அதிபரின்பிரதிநிதியும், நான்கு அதிபர்களும் இக்குழுவில் அங்கம் வகித்தனர். [வண்-நிரு]

# 8கால்களுடன் அதிசய ஆட்டுக்குட்டி

(புலோலி)

புலோலியிலுள்ள ஆடு ஒன்று எட்டுச்கால்களையும், இருமடிகளையும் கொண்ட அதிசய ஆட்டுக்குட்டியொன்றை ஈன்றுள்ளது

புலோலி தெற்கு முருகையன் கோவிலடியில டிபில் உள்ள எஸ். ஏரம்புவினுடைய வீட்டிலுள்ள ஆடே இந்த அதிசய ஆட்டுக்குட்டியை ஈன்றுள்ளது. இக்குட்டி உயிருடனேயே இருக்கின்றது.

பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் கே. தங்கராஜா இந்த அதிசய ஆட்டுக்குட்டிக்கான வைத்திய சிகிச்சைகளைமேற்கொண்டார் பெருந்திரளான மக்கள் அதிசய ஆட்டுக்குட்டியைப் பார்வையிட்டு வருகின்றனர்.

# இன்று

பேராசிரியர் கனகசபாபதி கைலாசபதி நினைவுச் சொற்பொழிவு இன்று 1-30-க்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறுகின்றது.

துணைவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமையில், பேராசிரியர் கா. சிவத்தம்பி 'இயக்க நிறைவுக்கான இலக்கிய நடைமுறை' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (நா)

# இரு ஆசிரியர்களின் சங்கிலி கொள்ளை!

[வவுனியா]

வவுனியா வெளிச்சக்குளம் பாடசாலைக்குள் புகுந்த முகமூடி அணிந்த இரு இளம் நபர்கள் அங்கிருந்த இரு பெண் ஆசிரியர்களின் சங்கிலிகளை அறுத்துக்கொண்டு ஓடிவிட்டனராம்.

நேற்று பகல் 11 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. இவர்கள் கொச்சையாகத் தமிழ்பேசியதாகவும் கூறப்படுகின்றது.

# இராணுவமுகாம் விஸ்தரிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இராணுவ முகாம் விஸ்தரிக்கப்பட்டு வருவதை தொடர்ந்து முகாமிற்கு அருகில் இருக்கும் கிளிநொச்சி கனிஷ்ட மகாவித்தியாலயம் தொடர்ந்து இயங்குவதில் பெரும் தடங்கல் ஏற்பட்டுள்ளது

இப்பாடசாலையில் கல்வி பயிலும் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

**சகோதரி லூசியா செபஸ்தியாம்பிள்ளை**

சங்கைக்குரிய சகோதரி மேரி லூசியா 14-02-86 வெள்ளி மாலை இறைவனடி சேர்ந்தார். அவரின் இறுதிச்சடங்குகள் மயிலிட்டி புனித சூசையப்பர் மடத்தில் 15-02-86 சனிக்கிழமை மாலை 3மணிக்கு நடைபெறும்.

தகவல்; மாகாணத்தலைவி.

திருக்குடும்ப கன்னியர்மடம்,
121, பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

(C 252)

**நாகநாதர் சிவசம்பு**

இணுவில் தெற்கு நாகநாதர் சிவசம்பு (இளைப்பாறிய ஆசிரியர்) காலமானார். இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், இராஜேஸ்வரி, பஞ்சாட்சரம் (ஆசிரியர்), இராசலிங்கம் (மில்க்வைற்தொழிலகம்), பரராசசேகரம் (சுவிற்சலாந்து) ஆகியோரின் அன்புத் தந்தையும், குலசிங்கம் (குவைத்), அற்புதராணி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனும், கணதர்சினி, சிவதர்சினி, கமலதர்சினி ஆகியோரின் பேரனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் சனிக்கிழமை (15-02-86) (இன்று) தாவடி மயானத்தில் பகல் 12 மணியளவில் நடைபெறும்.

தகவல்:
சி. இராசலிங்கம்.

(C 774)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram, Eelanadu, Telephone, 22389, 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org